செங்குந்த மித்திரன்

ஆவணி

Sept. 1932

5

JL
7592SG m211,N28
N32.5.7
158900

333

9th SEP 1932

# செங்குந்த மித்திரன்


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு


| தொகுதி | பிரஜோற்பத்தி ௵ | பகுதி |
|---|---|---|
| ௫ | ஆடி ௴ | ௭ |


## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| கடவுள் வாழ்த்து | ... | 161 |
| அறிக்கை | ... | ,, |
| தலைச்சங்க அறிக்கை | ... | 162 |
| செங்குந்தர் கல்வி நிதி (உபகாரச் சம்பள விளம்பரம்) | ... | 163 |
| ஒழுக்கப் பகுதி | ... | 165 |
| புது உலகமும் பழைய உலகமும்:—இந்தியர் கப்பல் தொழில் | .... | 168 |
| அறிவியல் பகுதி:—எலும்பைக் கொண்டே உயிரைப் படைத்தல் | ... | 171 |
| இளைஞர் பக்கம்:—ஒரு சம்பாஷணை | .... | 178 |
| சிறுகதைச் செய்யுட் கோவை | ... | 176 |
| சமயப் பகுதி:—இந்து தெய்வ தத்துவார்த்த விளக்கம் | ... | 179 |
| சீர்திருத்தப் பகுதி:—நம்மவர் கைத்தொழில், வியாபாரம் | ... | 181 |
| மாதர் பகுதி:—கொடியேற்று விழாக் கும்மி | .... | 183 |
| இளம் விதவைகள் | ... | 184 |
| சுகாதாரப் பகுதி:—'தேக சுகம்' | ... | 185 |
| வர்த்தமானம் | .... | 188 |
| இரண்டாவது மகாநாட்டு வரவேற்புக் கழக உபதலைவர் | .... | 189 |
| கிளர்ச்சி | ... | 192 |


காரியாலயம்:—2/17, பவழக்காரத் தெரு, சென்னை.



இரண்டாவது வாலிப மகாநாட்டுத் திறப்புவிழா
வாற்றிய நக்கோலம்

திரு. அ. ரா. செல்லப்ப முதலியார் அவர்கள்

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

தொகுதி—ரு]     பிரஜோற்பத்தி வருஷம், ஆடி மாதம்     [பகுதி—எ

SEP 193

## கடவுள் வாழ்த்து

கடையவனேனைக் கருணையினால் கலந் தாண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய் விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னு முத்தர கோசமங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரா னெனைத் தாங்கிக்கொள்ளே. (திருவாசகம்)

## அறிக்கை

மித்திரனுக்குச் சேரவேண்டிய சந்தாவினைப் பல சந்தா நேயர்கள் இரண்டு மூன்று வருஷங்களுக்கு மேலும் பாக்கியாக வைத்துக் கொண்டு இருக்கின்றனர் என்பதைப் பன்முறையும் வெளியிட எமக்கு மிக்க வெட்கமாக இருக்கின்றது. வி. பி. தபாலில் அனுப்பினால் யாதொரு தாக்ஷண்யமுமின்றி வாங்க மறுத்து விடுகின்றனர். நேரில் வசூல் செய்யப் பிரசாரகர்களை அனுப்பினால் பதுங்கிக் கொள்வோரும், பணங் கேட்க வந்து விட்டாரே என்று அவர்மீது சீறி விழுவோரும், அவ்வளவு ஒழுங்கற்ற முறைகளில் நடக்கமனமில்லாது தவணைகளைக் கடத்திக்கொண்டே போய் வந்தவர் காலையுடைத்துக் கழுத்தில் மாட்டுவோரும், ரசீது கொடுத்தால் பணங் கொடுப்பதாக வாக்களித்து விட்டு ரசீதை வாங்கிக்கொண்டு பணத்துக்கு மறு வருஷம் வரச் சொல்லுவோருமாக நம்முடைய சந்தா நேயர்களுள் சிலர் நடந்துகொண்டு வருகின்றனர் எனில், நம்மவர்களினது அபிமானத்தை எவர்தான் மதிக்க முடியும்? இத்தகைய நடத்தை நம்மவர்களுள் பெரும்பான்மையோருக்கு இருக்குமாயின் அதுவே நம்மை அந்நியர் அசட்டை செய்வதற்கு ஏதுவாகுமென்பதைக் கூறவேண்டுமோ? சிலர் நமது மித்திரன் இலவசமாக அனுப்பப் படுகிறதாக நினைத்துக்கொண் டிருக்கிறார்களாம். மற்றும் சிலர் பத்திரிகையைப் பெற்றுக் கொண்டு எனக்குப் பத்திரிகை வந்து ஒரு வருஷமாகிறது, இரண்டு வருஷமாகின்றது. நான் எதற்காகச் சந்தா செலுத்துவது என்கிறார்களாம். வேறு சிலர் தம்மைத் தாமே மறைத்துக் கொள்ள எண்ணித் தமது பெயரை மாற்றிச் சொல்லுகிறார்களாம். இன்னும் அந்தமில்லாத செயல்கள் வேறு பலரிடம் காணப்படினும் இதற்குமேல் அவற்றை விவரிக்க எமது மனம் எழவில்லை; கையும் எழுத மறுக்கின்றது. இந்நிலையில் குலமுன்னேற்றப் பிரசாரம் பத்திரிகை வாயிலாக எவ்விதம் செய்துகொண்டு வர முடியும் என்பது எமக்கு விளங்கவில்லை. பிரசாரகரிடமிருந்து இத்தகைய செய்திகள் இனியும் கிடைக்குமாயின் இவ்விதம் நடந்துகொள்வோரின் பெயர்களையும் விலாசங்களையும் அப்போதைக்கப்போது

நமது மித்திரனில் வெளியிட்டுக்கொண்டு வரத் தீர்மானித்துள்ளோம். அப்பொழுதாவது யாராவது அவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தி அவர்களைச் சீர்திருத்த முயல்வார்கள் என நம்புகின்றோம். ஆயினும் அவ்விதம் பிரசுரிக்க அன்பர்கள் இனி இடந் தரமாட்டார்களென்றே எதிர்பார்க்கிறோம். சந்தா பாக்கிகளை வசூலிக்க வரும் பிரசாரகர்களுக்கு அன்பர்கள் யாதொரு தொந்தரவும் தாராமல் இருப்பார்களென்றே நம்புகிறோம்.

(பத்திரிகாசிரியர்.)

---

## தலைச்சங்க அறிக்கை

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிருவாகசபைக் கூட்டமும் கல்விநிதியின் காப்பாளர் சபைக் கூட்டமும் அடுத்த செப்டம்பர்மீ 6-ம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 7-30 மணிக்கு மேல் சென்னை பவழக்காரத் தெரு, 17-ம் எண்ணுள்ள மித்திரன் காரியாலயத்தில் கூடும். அதுசமயம் வந்திருந்து கூட்டங்களைச் செவ்வனே நடத்தி வைக்குமாறு மேற்படி சபைகளின் அங்கத்தினர்கள் வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

### நிருவாக சபையினர் ஆலோசிக்க வேண்டிய விஷயங்கள்

1. மித்திரன் சந்தா பாக்கிகளை வசூலிக்கும் வழிகளை ஆராய்ந்து அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தல்.

2. மாதாமாதம் மித்திரனைத் தயாரிப்பதில் மித்திரன் ஆசிரியருக்குத் துணையாக ஒருவரைச் சம்பளத்துக்கு நியமித்தல்.

3. மித்திரன் சந்தாக் கணக்கைப் புதுப் புத்தகத்தில் பெயர்த்தெழுத ஏற்பாடு செய்தல்.

### காப்பாளர் சபையினர் ஆலோசிக்க வேண்டிய விஷயங்கள்

1. அடுத்த ஆண்டின் வரவு செலவு திட்டத்தினைத் தயாரித்தல்.

2. உபகாரச் சம்பள மனுக்களைப் பரிசோதித்து யார் யாருக்கு உபகாரச் சம்பளம் அளிப்பதென்பதைத் தீர்மானித்தல்.

3. கல்விநிதி சம்பந்தமான கணக்குகளை யார் பேரில் எந்த பாங்கியில் வைத்துக் கொள்வதென்பதைத் தீர்மானித்தல்.

4. கூட்டங் கூடும் தேதிகளைப் பற்றிய சட்டத்தினைத் திருத்தல்.

இங்ஙனம்,
அமைச்சர்கள்.

## மித்திரன் போஷகர்களுக்கு

நமது 'மித்திரன்' பல போஷகர்களிடமிருந்து பலவிதமான ஆகாராதிகளை எதிர்பார்க்கிறான். தங்களது திறமைக்கேற்ப புலதிறப்பட்ட அரிய வியாசங்களை அடிக்கடி அனுப்புமாறு [illegible] அவன் சார்பாக அறிஞர்களை வேண்டிக்கொள்ளுகிறோம். வியாசங்கள் நங்குல நலத்தையும் பொது நலத்தையும் உயர்த்துவனவாக இருத்தல் வேண்டும்; தெளிவாகவும் காகிதங்களின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டிருக்க வேண்டும். வியாசங்கள் ஆங்கில மாத முதல் தேதிக்குள் பத்திராதிபரை யடையின் நலமாயிருக்கும். எந்த வியாசத்தைப் பிரசுரிப்பதென்பதை ஆசிரியரே தீர்மானிப்பார்.

1587
500 08



(3)

# விளம்பரம்

## செங்குந்தர் கல்வி நிதி

### ஏழைச் செங்குந்த மாணுக்கர்களுக்கு உபகாரச் சம்பளம்

சென்ற வருஷம் போலவே இவ்வருஷமும் உயர்தரக் கல்வியை நாடும் சில ஏழைச் செங்குந்த மாணுக்கர்களுக்கு உபகாரச் சம்பள மளிக்க நமது கல்விநிதி தீர்மானித்திருக்கிறது. உபகாரச் சம்பளத்தை நாடும் ஏழைச் செங்குந்த மாணுக்கர்களின் பெற்றோராவது பாதுகாப்பாளராவது அடியில் கையொப்ப மிட்டிருப்பவருக்கு ஆகஸ்டுமீ 30-ஆம் தேதிக்குள் மனு எழுதியனுப்பவேண்டும். செப்டம்பர் மாதத்திய செங்குந்த மித்திரனில் கல்விநிதிக் காப்பாளர் சபையின் தீர்மானம் வெளியிடப்படும்.

மனுவில் குறிப்பிட வேண்டியவை:—

1. பிள்ளையின் பெயர்
2. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் பெயரும் விலாசமும்
3. பிள்ளை பிறந்த இடமும் தேதியும்
4. பிள்ளை படிக்கும் வகுப்பும் கலாசாலையும்
5. சென்ற பரீக்ஷையில் பெற்ற மார்க்குகள்
6. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் தொழில், வருமானம், சொத்து முதலியன
7. மனுதாரர் குடும்பத்து நபர்களின் தொகையும் அவர்களின் ஜீவனோபாயங்களும்
8. அவர் குடும்பத்தில் படிக்கும் இதர பிள்ளைகளின் தொகையும் வகுப்பும்
9. நாடும் ஒத்தாசையின் தன்மையும் அளவும்
10. ஏற்கெனவே வேறு ஒத்தாசை பெற்றிருந்தால் அதன் தன்மையும் அளவும்
11. உதவிக்குப் பாத்திரர் என்பதை நிரூபிக்கக்கூடிய இதர விவரங்கள்
12. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் கையொப்பம்
18. பள்ளிக்கூடத்துத் தலைவரின் சிபார்சுக் குறிப்பும் கையொப்பமும்

மனு செய்துகொள்வோர் கவனிக்கவேண்டிய முக்கியமான நிபந்தனைகள்:—

1. (a) மேற்குறிக்கப்பட்டிருக்கும் விவரங்கள் உண்மை யென்பதற்கு அத்தாட்சியாக மாணவர் படிக்கும் கலாசாலை அதிகாரியின் கைச்சாத்திட்ட சிபார்சு குறிப்பு ஒன்று ஒவ்வொரு மனுவுடனும் வாங்கி யனுப்புதல் வேண்டும்.

(b) உண்மைச் செங்குந்தர் சங்கங்கள் உள்ள இடங்களிலிருந்து மனு அனுப்புவோர் தம் மனுவோடு அவ்வச் சங்கத்தின் தலைவர் சிபார்சையும் காரியதரிசி சிபார்சையும் தனித்தனியே வாங்கி யனுப்புதல் வேண்டும்.

இதுவன்றி, ஒவ்வொரு பிள்ளைக்கும் மனுவோடு இரண்டு பிரபலமான கனவான்களுடைய சிபார்சு கடிதங்கள் வாங்கி அனுப்புதல் வேண்டும். சங்கமில்லாத இடங்களிலிருந்து மனு அனுப்புவோர்க்குச் சிபார்சு செய்பவரில் ஒருவர் உண்மைச் செங்குந்தராகவும், மற்றொருவர் வேறு சாதியினராகவும் இருத்தல் வேண்டும்.

3. உபகாரச் சம்பளத்தை நாடும் மாணுக்கர்கள் சம்பளம் பெற்று இடையில் அசிரத்தையினாலோ தப்பு நடத்தையினாலோ படிப்பை நிறுத்திவிட நேரிடில், அவர்கள் அதுவரை பெற்ற சம்பளத்தைக், கல்வி நிதிக்குத் தாம் ஈடுகட்டித் தருவதாகச் சிபார்சு செய்யும் கனவான்களில் ஒருவரிடமிருந்து ஜாமீன் கடிதம் ஒன்று வாங்கி மனுவோடு அனுப்புவதோடும் மனு செய்துகொள்ளும் பெற்றோராவது பாதுகாப்பாளராவது தாமும் அவ்வித ஈடுகட்டித் தருவதாக ஒப்புக்கொள்ளல் வேண்டும். கையொப்பமிடுவோர் மாணவர் நின்ற மூன்று மாதங்கட்குள் வாங்கிய பணத்தைக கல்விநிதிக்கு ஈடுகட்டித் தராதவறினால் அத்தொகை ஜாமீன் கொடுத்தவரிடமிருந்து வசூலிக்கப் பெறும்.

4. உபகாரச் சம்பளம் பெறும் மாணுக்கர்கள் தமது கலாசாலை அதிகாரிகளால் எப்போதாவது துர் நடத்தைக்காகத் தண்டிக்கப்படுவரேல் அன்னவர்களுக்கு உபகாரச் சம்பளம் அதுமுதல் நிறுத்தப்படும். அதுவரை கொடுத்துள்ள பணம் மேற்கூறிய முறையில் வசூலிக்கப் பெறும்.

5. உபகாரச் சம்பளம் பெறும் மாணுக்கர்கள் நமது தலைச்சங்கத்தையாவது அதன் கிளைச் சங்கங்களையாவது, அவற்றின் நோக்கங்களையும் தொண்டுகளையுமாவது, பொதுவில் உண்மைச் செங்குந்தர் இயக்கத்தினையாவது தாக்கி அவற்றிற்குப் பாதகமாக நடந்து கொண்டாலும் அவர்களுக்கு அது முதல் உபகாரச் சம்பளம் நிறுத்தப்படும்.

6. கல்வி நிதியின் உபகாரச் சம்பளத்தை வாங்கும் ஒவ்வொரு மாணாக்கரும் தான்பெறும் உதவிக்குப் பிரதியுபகாரமாகக் கீழ்க்கண்ட விதங்களில் தம் குலாபிமானத்தை விளக்குவதாக ஒரு தனிக் கடிதத்தில் எழுதித் தரவேண்டும்:—

(a) தலைச்சங்கத்தின் நோக்கங்களையும் செயல்களையும் பாமர ஜனங்களுக்கு அறிவித்து அவர்கள் குல முன்னேற்ற விஷயத்தில் ஈடுபடுமாறு பிரசாரஞ் செய்து தமது கல்வி தம் ஆயுள் பரியந்தம் பொது நலத்துக்கு உபயோகமாகும்படிச் செய்ய வாக்குறுதி தரவேண்டும்;

(b) தாம் வாழ்க்கையில் ஈடுபட்டுச் சம்பாத்தியம் செய்யும் சமயத்தில் தாம் கல்வி கற்கும் சமயம் கல்வி நிதியிலிருந்து பெற்ற உதவிக்கு நன்றியறிதலாகச் செங்குந்தர் கல்விநிதிக்குத் தமது வருமானத்தில் குறைந்தது ரூபாய்க்குக் காலணாவாவது இடைவிடாது நன்கொடையாக வழங்கிவர வாக்குறுதி செய்யவேண்டும்;

(c) நமது 'மித்திரன்' ஓங்குமாறு ஒத்தாசை புரியவேண்டும்.

7. மனுவில் மேற்குறித்த விவரம் எதுவேனும் விடுபட்டிருந்தாலும் உண்மைக்கு மாறாக இருந்தாலும் அம்மனு தள்ளிவிடப்படும்.

உதவி பெறுவோர் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்:—

I. உபகாரம் பெறும் ஒவ்வொரு மாணவர்க்கும் அனுமதிக்கப் பெற்றுள்ள தொகை அக்டோபர் முடிவில் ஒன்றும், ஜனவரி முடிவில் ஒன்றும், மார்ச்சு முடிவில் ஒன்றுமாக மூன்று தவணைகளில் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்பெறும்.

II. ஒவ்வொரு தவணைக்கும் ஒரு வாரம் முன்னதாகவே ஒவ்வொரு மாணவரும் தமது கலாசாலை அல்லது கல்லூரித் தலைவரிடமிருந்து தமது மார்க்குகளையும், தமது நடத்தையையும், தாம் படிப்பில் அடைந்துள்ள விருத்தியையும் குறித்து ஒரு நற்சாட்சிப் பத்திரம் வாங்கி அனுப்பவேண்டும். இந்த நற்சாட்சிப் பத்திரமின்றிப் பணமனுப்பலாகாது.

III. புத்தகச் செலவுக்கு உபகாரம் பெறுவோர் தாம் வாங்கிய புத்தகங்களின் பில்களைத் தமது கலாசாலைத் தலைவர்களது அங்கீகாரக் கையெழுத்தோடு அனுப்பிய பிறகே பணங் கொடுக்கப் பெறுவர்.

2/17, பழவக்காரத் தெரு,
சென்னை.
1931ளு ஆகஸ்டு மீ 15உ

ம. பா. கந்தசாமி முதலியார், பி. ஏ., பி. இ.,
அமைச்சர், செங்குந்தர் கல்விநிதி.

---

## செங்குந்த திலகர் கவிச்சக்ரவர்த்தி

# ஒட்டக்கூத்தர் திருநாள்

பிரஜோற்பத்திளு ஆவணி மீ 9உ (செவ்வாய்க்கிழமை 25—8—31) உத்திராட நக்ஷத்திரத்தில் வருகிறது.

இத்திருநாளைச் செங்குந்தரனைவரும் மேல்குறிப்பிட்டுள்ள தினத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடிக் கல்வி, செல்வம் முதலிய எல்லாவற்றின் பெருக்கையு மடைந்து இன்புறுவாராக.

ஒட்டக்கூத்தர் படம் 'செங்குந்தமித்திரன் ஆபீஸ், 2/17, பவழக்கார தெரு, சென்னை' என்னும் விலாஸத்திற் கிடைக்கும். விலை— தபாற்கூலி யுட்பட ரூ. 1—4—0.



# ஒழுக்கப் பகுதி

திருவாளர் ஆ. வே. முத்தையன் அவர்கள், B. A., B. L.

இவ்வொழுக்கப் பகுதியில் நமது "மித்திர"னுக்கு வெகு காலமாக யான் வியாசம் அனுப்பாமலிருப்பதைப்பற்றி நண்பர் ஆசிரியரவர்கள் எத்தனை தடவைகளாக என்னை எச்சரித்தும் அவர்கள் விருப்பத்திற் கிணங்கி வரப் பல இடையூறுகள் தடைசெய்ததுமன்றி, யான் எழுதுவதும், சொல்வதும் அனேகருக்கு இன்பமளிக்காவிடினும் நம்மனோர் பெரும்பாலார்க்குத் துன்பம் விளைக்குமெனக் கருதி வாளா விருந்தேன்.

"ஒழுக்கம், வினை, கோயில், கடவுள்" இவைகளைப் பற்றி நம்மவர்கள் அதிகம் உண்மை தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிற தென்பதே எனது தாழ்ந்த அபிப்பிராயம். ஆகவே அவைகளைப் பற்றிச் சொல்லுவதும் எழுதுவதும் எனது முக்கிய நோக்கம். இந்த அடையாளங்களைக் கொண்டே நம்மில் பலர் எனக்குத் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வதுமுண்டு.

பெரிய கும்பலில் யானிருப்பதைக் காணும் பிறருக்கு யானொருவனே அவர்களுடைய இலக்காகவிருந்தால் எனது தேக அடையாளங்களை ஞாபகப்படுத்திக்கொள்வது எளிது. எனக்கோ அத்தனை நூறு, ஆயிரம், நண்பர்களை ஞாபகப்படுத்திக் கொள்வது முடிகிறதில்லை. அப்படி முயற்சித்தாலும் ஒன்றுக்கொன்று முரணாக, ஒருவரை மற்றொருவராக நினைத்துக்கொள்வது முண்டு. இக்காரணம் பற்றியே பலரைத் திரும்பச் சந்திக்கும் போது, அந்நண்பர்கள் என்னை ஒரு பெரிய கும்பலிலோ, கூட்டத்திலோ சந்தித்திருக்க, அவர்களை யான் தெரிந்துகொள்ளாம லிருப்பது ஏதோ டாம்பீகம் அல்லது அசட்டைத் தன்மை என்று நினைக்கிறார்கள். இதன் உண்மையை அவர்கள் உணர்ந்துகொள்வார்களே யாயின் அப்படி நினைக்க இடமிராது. அன்றியும், ஏனைய சில நண்பர்களைப் போல எனக்கு ஞாபக மூட்டுவார்கள். இச்சில நண்பர்கள் எப்படிச் செய்கிறார்களென்பதைச் சொல்லுவதற்காகத் தான் நான் இப்போது குறிப்பிட வந்தது. "ஐயா, தங்களை இன்ன விடத்தில் பார்த்தேன். நல்ல ஞாபகமிருக்கிறது. தாங்கள் மறந்தாலும், யான் மறக்கவில்லை. கடவுளைப் பற்றி ஒன்றும் சொல்ல மாட்டேனென்றும், கோயில்களில் வீண் செலவுகள் செய்யப்படுகின்றன வென்றும், சொன்னீர்களே? ஞாபக மிருக்கிறது" என்பதாக இவ்வடையாளங்களை எடுத்துக் காட்டித் தங்களை எனக்குத் தெரிவித்துக்கொண் டிருக்கிறார்கள்.

இதைக் கொண்டு யான் யூகிப்பது மேற்கண்ட அதி-அதிஉயர்ந்த, ஆனால் மிக-மிகத் தாழ்த்தப்பட்ட பொருட்களில் நம்மவர்களுக்கு அதிக பற்றுதலுண்டென்பதே. இந்தப் பற்றுதலைப் பற்றி யானுள மகிழ இடமிருக்கிறது. ஆனால் அப்பற்றானது ஆய்ந்துணர்ந்த பற்றாக இருக்கவேண்டுமென்பதே எனது நோக்கம். அதற்காகவே யான் சில சமயங்களில் இடித்து இடித்துச் சொல்ல நேருகிறது. இப்படிச் சொல்வது நண்பர்கள் பலருக்கு மனக் கோணலை விளைவிக்கும். ஆனால் மனக்கோணலோ டிராமல், யான் சொல்வது சரியா தப்பா, என்பதைத் தாங்களே தங்கள் சொந்த அறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படிச் செய்வதற்குப் பதிலாக, அவசரப்பட்டும், சில வேளை, "அதெல்லாம் நம்மால் ஆகா" தென்று சொல்லியும், முரண்படுவது பிற்போக்குக்கு காரணமாயும், முற்போக்குக்கு இடைஞ்சலாயு மிருப்பதென நான் உரைப்பது. குதர்க்கம், கோபம், போலி அபிமானம் இவைகளை விட்டு, எப்பொருளையும் ஏன் நன்றாக, பொதுவாக, நடுநிலையாக ஆராய்ந்து விசாரிக்கக் கூடாது? என்பதே எனது கேள்வி. அதனால் விளையும் இன்னல்கள் யாவை? இப்போது, நம்மிடமுள்ள தப்பெண்ணங்களால் நிகழ்ந்துவரும் இன்னல்களை விட வேறு இன்னல்கள் உண்டாகா. 'அப்படியானால் தாங்கள் காஞ்சியில் "எடுத்ததெற்கெல்லாம் முருகன் ஏற்பதற்கெல்லாம் வினைப்பயன்" எனத் தாழ்த்திச் சொல்லியது, இவைகள் தப்பெண்ணங்களென்பதோ?' வென நண்பர்கள் பலர் வினவக் கூடும். இவ்வினா, வயதில் முதிர்ந்தவர்கள் கேட்பதில் பயனில்லை; கேட்கவு மாட்டார்கள். 'ஏதோ கலிகாலம், இந்தக் காலத்துப் பையன்களெல்லாம் உளறிக் கெட்டுப் போகிறார்க'ளென்று முணுமுணுத்துக் கொண்டு, தங்கள் போக்கே போக்காகத் தங்கள் மிச்சக் காலத்தையும், ஒன்றையும் பாராமல் கண்ணை மூடிக்கொண்டு, கழித்துவிடுவார்கள். அவர்களுக்காகப் பதிலெழுதுவதும் சொல்லுவதும், அவர்களை முன்னிலையாக வைத்துக்கொண்டு இளைஞர்களுக்குச் சொல்லுவதாகுமே தவிர, சொல்ல வேண்டியதெல்லாம் நம் வாலிபர்களை விழிக்கச் செய்வதற்கே யாம்.

ஒருவித நோயுண்டு: கண்ணை மூடிக்கொண்டே அல்லது தூங்கிக் கொண்டே விழித்திருப்பவர்கள் போலச் சிலர் நடவடிக்கைகளை நடத்துவார்கள். அதற்கு (Somnabulism) என்பதாக ஆங்கிலத்தில் சொல்வது. அந்நோயுள்ளவர்கள் விழித்துக் கொண்டால் ஒன்றும் ஞாபக மிருப்பதில்லை. அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு சஞ்சரிக்கையில் அவர்களைத் தொட்டால் உடனே விழுந்துவிடுவதுடன்

ஆபத்தும் நேரும்: அது போன்றவர்களுக்கும் சொல்லுவதில் பயனில்லை. உண்மையாகவே விழித்துக்கொண்டு, 'ஏன் என்னை விழிக்க வைத்து விட்டீர்கள். இனி தூக்கம் பிடிக்கவில்லை. ஏதாவது செய்துதானாகவேண்டும். எதைச் செய்யலாம்?' என்று கேட்பவர்களுக்குத் தான் சொல்லுவதும் எழுதுவதும் நன்மை பயக்கக் கூடுமென்பதை நண்பர்கள் நன்றாக மனதில் வைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இம்மாதிரியான நண்பரொருவரிடமிருந்து கடிதமொன்று வரப் பெற்றேன். என் மனம் களிப்புற்றது. 'ஓகோ! நாம் போட்ட சத்தம் சிலரை விழிக்கச் செய்திருக்கிறது போலும்!' என நினைத்து உண்மை விழிப்புத்தானோவெனத் தெரிந்துகொள் கடிதத்தை இரண்டு மூன்று தடவை வாசித்துப் பார்த்தேன். இல்லை; இன்னம் கொஞ்சம் மயக்கத் தூக்கத்தில் அல்லது தூக்க மயக்கத்தில்தானிருக்கின்றார் எனத் தெரியலாயிற்று. எனினும் அவரை, அவரைப் போன்றவர்களை, இன்னும் நன்றாய்த் தட்டியெழுப்புவோம். கண்ணைத் தேய்த்துக் கொண்டு திறக்கட்டும் என்பதாக, இந்தப் பதிலை 'மித்திரனு'க்கு அனுப்புகிறேன். இப்போதே வியாசம் நீண்டுவிட்டபடியால் இன்னும் அதிகமாகப் போனால் யாரும் ஊன்றிப் பார்க்க மாட்டார்களென்பதாகக் கூடிய வரையில் சுருக்கக் கூறுகிறேன்.

நண்பர் எழுதுகிறார்: "என்னிடமிருந்து வரும் சிறு அறிவின் விருத்தியே, தாங்கள் வெளியிட்ட [காஞ்சிபுரத்தில் என இடமாக வாசிக்கப்பட்ட சொற்பொழிவின்] விஷயத்தை உணர ஹேதுவாயிருந்தது. முற்றிலும் உணர்ந்திலன். ஐயங்கள் தோன்றுகின்றன. 'எடுத்ததெற்கொல்லாம் முருகன்' என்று தாங்கள் விளம்பியுள்ளீர். இதைப் படித்த பிறகு எனக்கு ஒரு எண்ணம் தோன்றிற்று அந்த ஐயமாவது: 'நமக்கு வினையில்லையா? வினையைக் கொடுத்த விமலன் இல்லையா? காரிய ஆரம்பத்தில் அருட்பெருஞ் சோதியின் எண்ணம் வேண்டாமா? காரியமுடிவிலே, என் வினைப்பயன் இவ்வண்ணம் வந்து மூண்டதுவேயென்று சொல்லக் கூடாதா என்பதே" என்றும், "சொந்த அறிவாராய்ச்சியிருந்தால் வினையில்லை என்றும், தொடங்கும் போது முருகா என்பதோ வேறு எந்தச் சொல்லோ, படைத்தவரை ஞாபகப்படுத்திக் கொள்ளச், சொல்லாமல் ஆரம்பிக்கலாமென்று சொல்லமுடியும் என்று சொல்ல எனக்குத் தைரியமில்லை" என்றும் சொல்கிறார். பிறகு "நம்மவர்கள் சமயத்தின் பொருளினை உணர்ந்தும், அதன்படி நடக்கவில்லையே தவிர, நடந்தார்களானால் உயரமாட்டார்கள் என்பது பிசகாகும்" எனக் கூறுகிறார். நீண்ட கடிதத்தைச் சில வரிகளில் குறிப்பிட்டேன். இது போன்ற சந்தேகமும், பயமும், ஆக்ஷேபனையும் புதியனவல்ல; மிக மிகப் பழயன. எனவே அவைகளைப்பற்றிச் சொல்லுவது ஏனைய நண்பர்களுக்கும் பயன் தருமென்றே நினைக்கிறேன்.

"நமக்கு வினை யில்லையா?"—சிலமொழிகளை நாம் தெளிவாகப் பொருள் தெரியாமலே கையாளுகிறோம். அம்மொழிகளில் இந்த "வினை"யும் ஒன்று. இதைப்பற்றி வெகுகாலத்திற்குமுன் நமது 'மித்திர'னில் வாக்குவாதம் நடந்தது. யானும் அதில் கலந்தேன். அதைத் திரும்பவும் விரிக்க இது இடமல்ல. அவசியமுமில்லை. வினையில்லையா?—வினை யென்றால் செய்கை. செய்கையின் விளைவையும், பயனையும் விளையெனக் கொள்வதுண்டு. நமக்கு வினையில்லையா வென்பது நமக்குச் செய்கை இல்லையா? வென்றும், நாம் செய்த செய்கைக்குப் பலன், விளைவு இல்லையா வென்றும் கேட்பதை யொக்கும். உடல் தாங்கியுள்ள உயிர் நிமிடந்தோறும் செய்கை வடிவமா யிருக்க, உயிருள்ள நமக்கு. வினையில்லையா? செய்கை யில்லையா வென்று கேட்பது கேள்வியைச் சேர்ந்ததல்ல. செய்கையின் பலன், வினையின் விளைவு, ஊழ் இல்லையா வென்பதும் கேள்வியைச் சேர்ந்ததல்ல? தொட்டால் சுட்டுவிடும் நெருப்பு. சுட்டுக் காயமாதல் நெருப்பைத் தொட்டதின் பலன், விளைவு. இதற்கு ஆதாரம் சாத்திரங்கள் வேண்டா. புலனாகாத நிகழ்ச்சிகளுக்கும் இது போன்ற வினை விளைவு உண்டா வென்பதை நியாய வாயிலாகவும் அனுபவிப்பதின் மூலமாகவும் தெரிந்துகொள்வதே உண்மை விளக்கம். அப்படியிருக்க, வினை, ஊழ் என்றால் ஏதோ தனியாக ஒரு பொருள் இருப்பதாகவும் அது மக்கள் மீது கொடுங்கண் வைத்திருப்பதாகவும் அதன் வன்மை பெரிதென்றும் ஏதோ பல பல விதமாகச் சிருட்டி செய்துகொள்ளுகிறோமே இந்த வினை, இந்த ஊழ் தான் போலியென நான் சொல்லுவது. இந்தப் போலிப் பொருள் படும்படித்தான் நாமும் அந்த மொழியை உபயோகிக்கிறோம். காரணமின்றிக் காரியமில்லை. காரியமுள்ள விடத்தில் காரணமிருந்தே தீரும். விஷத்தால் சாவு உண்டானால் அங்கு உடலில் விஷமிருக்கவேண்டும். அதுபோல் நாம் எடுக்கிற காரியம் தடங்கலானால் அத்தடங்கல் அங்கிருக்க வேண்டும். அத்தடங்கலும் நாம் செய்த தவற்றின் விளைவாக இருக்கும் போது, இந்த விஷயத்தை நேராக, "ஆம் நான் செய்த தவற்றால், முட்டாள் தனத்தால், இது பிசகிப் போய் விட்டது" என்று சொல்லாமல் "என்ன செய்வது? வினைப்பயனை வெல்ல யாரால் முடியும்?" என்றால் இது யாரை ஏமாற்றுகிறது? நம்மை நாமே வெறும் வார்த்தையால் ஏமாற்றிக்கொள்ளுகிறதா? ஏமாறிப் போகிறதா? சற்றுக் கூர்ந்து யோசித்துப் பார்க்கவும்.

ஊழ் ஆனாலும் பாழ் ஆனாலும் நமக்கு நிகழும் ஒவ்வொன்றிற்கும் நாமே காரணம். ஊழ் என்பது நாமே. நாம் செய்த செய்கையின் பலனே, விளைவே யாகும், ஆகையால் எற்பதெற்கெல்லாம் வினைப்பயன் எனப் போலிப் பொருள்படச் சொல்லுவதும் நினைப்பதும் சொந்த அறிவாராய்ச்சிக் குறைவன்றி வேறென்ன?

"ஆகா! ஊழின் வன்மையே வன்மை! வினைப்பயனின் ஆற்றலைப் பாருங்கள். நெருப்பைத் தொட்டேன் கை வெந்து விட்டது" என்று சொல்லுபவரைப்பற்றி யாம் என்ன நினைக்கவேண்டுமென்பதை உய்த்துணரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.



"எடுத்ததெற்கெல்லாம் முருகன்" என்பதைப் பற்றி விவரிக்க மனமிசையவில்லை. நம்மவர் முருகன் வேறு. யான் நினைக்கும் முருகன் வேறு. முருகனைப் பற்றியும் குமரனைப் பற்றியும் சில சமயங்களில் முன்னர் என தபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளேன். முருகனும் சரி, அவன் தகப்பனும் சரி, இயற்கை யழகினன், இன்ப உருவினன்; என்றும், எங்கும் உள்ளவன். அவனை நினைந்தால் மனக் கிளர்ச்சி மேலெழுமே யன்றி, தளர்ச்சி புண்டாவதில்லை. தளர்ச்சி புண்டாவதானால் நினைத்தது அம்முருகனை யல்ல. அது முருகனை நினைப்பது மல்ல. அப்படி நினைக்கும்போது வாய் பேசாது. அந்த முருகனுடைய சமயம், அறிவுச் சமயம், அன்புச் சமயம், ஒற்றுமைச் சமயம், சமரசச் சமயம். அறிவு, அன்பு, ஒற்றுமை, சமரசம் எங்கு இல்லையோ அங்கு முருகனுமில்லை; அவன் தகப்பனுமில்லை. நாமோ வீண் வார்த்தைகளில், போலி மொழிகளில் மயக்கங்கொண்டு வாய் பிதற்றுகிறோம். தயங்கி நிற்கிறோம்.

"சமயத்தின் பொருள் உணர்ந்தும் அதன்படி நடக்கவில்லையே தவிர" என்று நண்பர் சொல்லுவது நகைப்புக்கிடம். ஒன்றின் பொருளை யுணர்ந்து அதன்படி நடக்கிறதில்லை யென்றால் என்ன வேற்படுகிறது? கவனிக்கவும். விஷயம் தெரியாமலிருப்பது அறியாமையின் பெருக்கு. விஷயம் தெரிந்தும் அதன்படி யொழுகாமலிருப்பது அறிவின் துரோகம். தெய்வத் துரோகமென்று சொல்லப் பிரியமுடையவர்கள் சொல்லலாம். இந்தத் துரோகிகள் ஈடேறுவது எளிதல்ல வென்று யான் உரைக்க வேண்டியதில்லை. அறிவு, அன்பு, ஒற்றுமை, சமரசம் இவைகளை வெறுக்கும், இகழும், சமூகம் முன்னேறுவதில்லை. இவைகளைக் கொள்ளும் சமூகம் விருத்தி யடையும். இந்த வகையிலாவது யான் சொல்லிய மொழிகளின் உண்மையைக் கண்டுகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

---


## அறிவிப்பு

நமது மித்திரனில் எனது விலாசத்தைக் கண்டுள்ள பல மாணவர்களும் வித்துவான்களும் தங்கள் படிப்பிற்காகப் பண உதவி வேண்டுமென மிகவும் விழைந்த கடிதம் மேலுக்குமேல் எழுதுகின்றார்கள்; பதிலும் கேட்கின்றார்கள். ஒவ்வொருவருக்கும் தபால் எழுதுவதானால் அதற்கென எழுத்தான் ஒருவர் வேண்டும். அன்றியும், கேட்கும் வாலிபர்களுக்கும் பண உதவி அளவிட்டால் பெருந்தொகையாக முடியும். அவர்கள் அதற்கு உரித்தானவர்களா வென்று தெரிவதற்கும் தனி ஆபீஸ் வேண்டும். ஆகையால் நண்பர்களை யான் கேட்டுக்கொள்வதும் அவர்களுக்குச் சொல்வதும்:

"தங்களுடைய கடிதங்களெல்லாம் வருகின்றன. தனிமையில் ஒவ்வொருவருக்கும் பண உதவி செய்வது முடியாத விஷயம். யான் செய்யக்கூடியதெல்லாம் நம் தலைச்சங்கத்தின் கல்விநிதிக் காப்புக் கூட்டத்தினிடம் என்னாலாகின்ற தொகையை மாதாமாதம் கொடுத்து வருகிறேன். அவர்கள் மூலமாகவே தாங்களும் உதவிக் குரித்தானவர்களானால் உதவி பெற்றுக்கொள்ள வேண்டும்" என்பதேயாகும்.

ஆ. வே. முத்தையன்.

உலகத்தில், ஒரு விஷயத்தையும் அறியாது அஞ்ஞானத்தையே தங்கள் உடைமையாகப் பாவித்து மிருகங்களைப்போ லிருப்போர் சிலர்; விஷயங்களை அரைகுறையாகத் தெரிந்துகொண்டு தாமே ஞான உருவங்கள் எனக் கர்வம் பாராட்டித் திரிவோர் சிலர்; அரை குறையான அறிவுடன் அறிஞர்கள்து உண்மை உபதேசங்களையும் காதிற் போட்டுக்கொள்ளாது தாம் பிடித்தமுயலுக்கு மூன்றே கால் எனச் சாதிப்போர் சிலர். இம் மூன்றுவித மக்களுள் கடைசி கோஷ்டியாரே மிகவும் ஆபத்தானவர்.




# இந்தியர் கப்பல் தொழில்

## புராதன பெருமை

### ஓர் ஆராய்ச்சி

(நவசக்தியிற் கண்டது)

இந்தியா தன்னைப் பாதுகாத்துக்கொள்ளப் போதிய கப்பற் படையை வைத்துக்கொண்டிருக்கவில்லையென்றும், இந்தியர்கள் கப்பற் றொழிலில் பயிற்சி பெற வேண்டுமென்ற ஆர்வத்தைப் பெற்றிருக்கவில்லையென்றும், இதனால் இந்தியா சுயராஜ்ய இன்பத்தை நுகரத் தகுதியுடையதாயில்லையென்றும் சிலர் கூறுவர். இவர் கூற்று பொய்யென்று மறுத்தல் எளிது. இந்தியாவில் புராதன காலந்தொட்டுக் கப்பற்றொழில் திறம்பட நடைபெற்று வந்திருக்கிறதென்பதற்கும், இந்தியர்கள் வெளிநாடுகள் பலவற்றிற்கும் சென்று வாணிபம் செய்து வந்தார்களென்பதற்கும் பல சான்றுகள் கிடைக்கின்றன.

வேத காலத்திலிருந்தே, இந்தியர்கள் திரை கடலோடித் திரவியந்தேடி வந்தார்கள். இங்ஙனம் செல்வதற்குப் பல வகையான கப்பல்களை நிர்மாணம் செய்யும் தொழிலாளர்கள் தனிப்பட்டவராய் இருந்தனர். மௌரியர்கள் காலத்தில் இவர்கள் அரசாங்க ஊழியர்களாயிருந்து சம்பளம் பெற்று வந்தது குறிப்பிடத் தக்கது. கப்பல்கள் கட்டுவதற்கு இன்னின்ன விதமான மரங்களே உபயோகிக்கப்பட வேண்டுமென்றும், இதனால் இன்னின்ன நன்மைகள் ஏற்படுமென்றும் விதிகள் ஏற்பட்டிருந்தன. கப்பல்களைக் கட்டுகையில் மரப் பலகைகளை ஒன்றாகக் கூட்டி அமைக்கும்போது அவைகளின் அடிப்பாகத்தை, அதாவது தண்ணீர் படும் பாகத்தை இரும்புச் சாமான்களால் பிணைக்கக்கூடாதென்றும், இதைத் தவிர வேறெவ்வித சாதனத்தை யாவது உபயோகித்து, டை பலகைகளைப் பிணைக்கலாமென்றும் ஓர் ஆசிரியர் எச்சரிக்கை செய்கிறார். கடல்களின் நடுவே, ஆங்காங்கு, காந்த சக்தியுள்ள கற்பாறைகள் இருக்கின்றனவென்றும், அவை இரும்புத் துண்டங்களினால் பிணைக்கப்பட்ட கப்பல்களை அடியில் இழுத்துக்கொள்ளும் என்றும் இவர் சமாதானம் கூறியிருப்பது பெரிதும் பாராட்டத் தக்கதாயிருக்கிறது.

#### கப்பல்களின் வகைகள்

'யுக்தி கல்பதரு' என்ற ஒரு வடமொழி நூலின்படி கப்பல்கள் 'சாமானியக் கப்பல்கள்' என்றும், 'விசேஷக் கப்பல்கள்' என்றும் இருவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அதாவது நதிகளிலும் ஆழமில்லாத நீர்நிலைகளிலும் செல்லக் கூடியன சாமான்யமென்றும், கடல்களில் செல்லக் கூடியன விசேஷமென்றும் வகுக்கப்பட்டிருந்தன. முற்சொன்ன சாமான்யக் கப்பல்கள், அவைகளின் நீளம், அகலம், உயரம் இவைகளுக்குத் தகுந்தாற்போல் பத்து வகையாகவும், அப்படியே விசேஷக் கப்பல்களும் பத்து வகையாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

#### சாமான்யக் கப்பல்கள்

| | பெயர் | முழ நீளம் | முழ அகலம் | முழ உயரம் |
|---|---|---|---|---|
| 1. | க்ஷுத்ரா | 16 | 4 | 4 |
| 2. | மத்யமா | 24 | 12 | 8 |
| 8. | பீமா | 40 | 20 | 20 |
| 4. | சபலா | 48 | 24 | 24 |
| 5. | படலா | 64 | 82 | 82 |
| 6. | பயா | 72 | 86 | 86 |
| 7. | தீர்க்கா | 88 | 44 | 44 |
| 8. | பத்ரபுடா | 96 | 48 | 48 |
| 9. | கர்ப்பரா | 112 | 56 | 56 |
| 10. | மந்தரா | 120 | 60 | 60 |

#### விசேஷக் கப்பல்கள்

இந்த விசேஷக் கப்பல்கள் தீர்க்கக் கப்பல்கள் என்றும், உன்னதக் கப்பல்களென்றும் இருவகையாகப் பிரிக்கப்பட்டு, முன்னதில் ஐந்து விதம் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.



#### தீர்க்கக் கப்பல்கள்

| | பெயர் | முழ நீளம் | முழ அகலம் | முழ உயரம் |
|---|---|---|---|---|
| 1. | தீர்க்கிகம் | 32 | 4 | 8 1/5 |
| 2. | தரணி | 48 | 6 | 4 4/5 |
| 3. | லோலா | 64 | 8 | 6 2/5 |
| 4. | ஓத்வரா | 80 | 10 | 8 |
| 5. | காமினி | 96 | 12 | 9 2/5 |
| 6. | தரி | 112 | 14 | 11 1/5 |
| 7. | ஜங்காலா | 124 | 16 | 12 4/5 |
| 8. | ப்லாவினி | 144 | 18 | 14 2/5 |
| 9. | தாரணி | 160 | 20 | 16 |
| 10. | வேகினி | 176 | 22 | 17 8/5 |

உன்னதக் கப்பல்கள்:—

| | பெயர் | முழ நீளம் | முழ அகலம் | முழ உயரம் |
|---|---|---|---|---|
| 1. | ஊர்த்வா | 82 | 16 | 16 |
| 2. | அநூர்த்வா | 48 | 24 | 24 |
| 3. | ஸ்வர்ணமுகி | 64 | 82 | 32 |
| 4. | கர்ப்பிணி | 80 | 40 | 40 |
| 5. | மந்தரா | 96 | 48 | 48 |

மேற்கூறிய கப்பல்களில் எதெதில் பிரயாணஞ் செய்தால் என்னென்ன பயன்கள் விளையும் என்ற விவரங்களும் கூறப்பட்டிருந்தன.

கப்பல்களில் பிரயாணம் செய்வோர் சௌகரியமாகச் செல்வதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்பதைப் பற்றியும் கப்பல்களை எப்படி அலங்கரித்து வைத்துக்கொண்டிருப்பதென்பதைப்பற்றியும் பல விதிகள் ஏற்பட்டிருந்தன. இவ் விதிகளின்படி ஒழுங்காக நடந்து வந்ததனால், பிரயாணஞ் செய்தவர், கப்பல் செலுத்துவோர் முதலியோர் எவ்வித ஆபத்திற்கும் அதிகமாக உட்படவில்லையென்று நன்கு புலனாகின்றது. கப்பல்களை அழகு படுத்துவதற்கு, தங்கம், வெள்ளி, செம்பு, இம்மூன்றின் கலப்பு ஆகிய இந்த நான்கு உலோகங்களையே உபயோகிக்க வேண்டும். தவிர, நான்கு பாய்மரங்களை உடைய கப்பல்களுக்கு வெண்மை நிறமும், மூன்று பாய்மரங்களுடையனவற்றிற்குச் சிவப்பு நிறமும், இரண்டு பாய்மரங்களுடையனவற்றிற்கு மஞ்சள் நிறமும், ஒரு பாய் மரமுடையனவற்றிற்கு நீல நிறமும் உபயோகப்படுத்தப்பட வேண்டும். கப்பல்களின் முகத்தில், அதாவது தலைப்பக்கத்தில் சிங்கம், எருமை, பாம்பு, யானை, புலி, பக்ஷிகள் முதலிய உருவங்களை மரத்தால் செய்து அழகுக்கு வைக்கலாம்.

கப்பல்களில் இருக்கும் "காபின்" என்று இக்காலத்தில் கூறப்படுவது அக்காலத்தில் 'மந்திரம்' என்று வழங்கப்பட்டு வந்தது. இந்த 'மந்திரம்' இருக்கும் இடத்திற்கும் அளவுக்கும் தக்கபடி கப்பல்கள் ஆங்காங்குச் செல்வதற்கு உபயோகிக்கப்பட்டு வந்தன. கப்பலின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குச் செல்லக்கூடிய அளவு விசாலமாயிருக்கக் கூடிய 'காபின்'களையுடைய கப்பல்களுக்குச் 'சர்ப்ப மந்திரக் கப்பல்கள்' என்று பெயர். அரசர்களுடைய பொக்கிஷம், குதிரைகள், ஸ்திரீகள் முதலியன செல்வதற்கு இவை உபயோகிக்கப்பட்டு வந்தன. கப்பலின் மத்திய பாகத்தில் 'காபினை' யுடைய கப்பல்களுக்கு 'மத்திய மந்திரக் கப்பல்கள்' என்று பெயர். மழை காலத்திலும், அரசர்கள் சந்தோஷார்த்தமாகச் செல்வதற்கும் இவை உபயோகிக்கப்பட்டு வந்தன. கப்பலின் தலைப்பக்கத்தில், அதாவது முகப்பில் 'காபினை' யுடைய கப்பல்கள் 'அக்ரமந்திரக் கப்பல்கள்' என்று அழைக்கப்பட்டன. இவை, பெரும்பாலும் கோடை காலத்தில் தூர தேசப் பிரயாணங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டன. தவிர, கடல்களில் யுத்தம் நடைபெறும்போதும், இவ்வகைக் கப்பல்களே உபயோகிக்கப்பட்டு வந்தன

#### மௌரியர் காலம்

இங்ஙனமே புத்தர் காலத்திலும், பின்னர் மௌரிய வம்சத்தினர் முதலியோர் அரசாண்ட காலத்திலும் இந்தியாவில் கப்பல் தொழில் மிக ஒழுங்காக நடைபெற்றது. சந்திரகுப்த மௌரியன் காலத்தில் கப்பற்றொழிலையும், கப்பல் வாணிபத்தையும் கவனிப்பதற்கென்றே தனியான ஓர் இலாகா இருந்தது. இந்த இலாகாவின் தலைவனுக்கு 'நாவாத்யட்சன்' என்று பெயர். சமுத்திரம், ஆறு, பெரிய நீர்நிலை ஆகிய இவைகளில் செல்லும் எல்லாக் கப்பல்களின் போக்கு வரவு விஷயங்களைப் பற்றியும் இவன் கவனித்து வந்தான். இந்த அதிகாரிக்குப் பல திறப்பட்ட கடமைகள் இருந்தன. தற்காலத்திலுள்ள "போர்ட் கமிஷனர்" (துறைமுக அதிகாரி) என்ற அதிகாரிக்குச் சமமாக இவனைச் சொல்லலாமாயினும், இவனுக்கு—மௌரியர் காலத்து 'நாவாத்யட்ச'னுக்கு—அதிக கடமைகள் இருந்தனவென்று சொல்ல வேண்டும். இவன் கப்பல் போக்கு வரவு, வியாபாரம் இவை சம்பந்தமாகப் பலவித வரிகளை வசூலிக்க வேண்டியவனாயிருந்தான். உதாரணமாக, கடற்கரையிலும், நதிக்கரையிலும், ஏரிக்கரையிலும் உள்ள கிராமங்கள், நிரந்தரமான ஒரு வரியை ஆண்டுதோறும் செலுத்திக்கொண்டு வந்தன. வலைஞர்கள், மீன் பிடிப்பதற்குரிய கட்டணமாகத், தங்களுடைய மீன் வரும்படியில் ஆறில் ஒரு பாகத்தை இந்த அதிகாரிக்குச் செலுத்தி வந்தார்கள். வியாபாரிகள் துறைமுகச் சுங்கம் செலுத்தி வந்தார்கள். அரசாங்கத்தினுடைய அல்லது அரசனுடைய கப்பல்களில் பிரயாணஞ் செய்ய விரும்புவோர், அதற்குரிய ஒரு கட்டணத்தைச் செலுத்தியே சென்றார்கள். சமுத்திரத்தில் முத்து, சங்கு முதலியன எடுக்க விரும்புவோர், குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்தி அரசாங்கத்தாருடைய படகுகளை உபயோகித்துக் கொள்ளலாம். இவை தவிர, சாமான்கள், மிருகங்கள் முதலியன ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோகப்பட்டனவென்றும், இதற்காகத் தனித் தனிக் கட்டணங்கள் விதிக்கப்பட்டு வந்தனவென்றும் தெரிகின்றது. இதனால் அக்காலத்தில் அதாவது இற்

றைக்குச் சுமார் இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவின் கப்பல் வியாபாரம் எவ்வளவு செழுமையாக நடைபெற்று வந்ததென்பது நன்கு புலனாகும். சிறிதளவு சாமானுடனும், ஒரு நாற்கால் பிராணியுடனும் கப்பலில் செல்லும் ஒரு மனிதன் ஒரு மாதம் (ஒருவித நாணயம்) கட்டணமாகச் செலுத்த வேண்டும். தலையில் அல்லது தோளில் எடுத்துச் செல்லக் கூடிய ஒரு மூட்டைப் பளுவுக்கும், பசு, குதிரை ஆகிய இவற்றிற்கும் தனித்தனியாக இரண்டு மாதமும், ஒட்டகை, எருமை முதலியவற்றிற்கு நான்கு மாதமும், ஒரு சிறிய வண்டிக்கு ஐந்து மாதமும், மாடுகள் இழுத்துச் செல்லக்கூடிய வண்டிக்கு ஆறு மாதமும், பெரிய வண்டிக்கு ஏழு மாதமும், கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும். வியாபாரத்திற்குரிய எந்தப் பொருளுக்கும், அது விற்பனைக்காயிருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு மூட்டைக்கு நான்கு மாதம் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

### பொதுஜன சௌகரியம்

மேலே கூறப்பட்ட வரிகளை வசூலிப்பதோடு "நாவாத்யட்சன்" பொது ஜனங்களின் சௌகரியத்திற்காகத் துறைமுகங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகள் சரியாக அனுஷ்டிக்கப் படுகின்றனவா என்பதையும் கவனித்துக்கொண்டு வந்தான்.

கப்பல்களும் சிறு படகுகளும், வருஷத்தில் குறித்த சில காலங்களிலேயே நதிகளைக் கடக்கலாமென்று விதி இருந்தது. மழை பெய்து வெள்ளம் பெருகியோடும் காலத்தில் ஆற்றைக் கடப்பது அபாயகரமானதால் இந்த விதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. எப்பொழுதும் ஒரே மாதிரியாக நீர் ஓடும் பெரிய ஆறுகளில், திறமையான மாலுமிகள் தலைமையில் ஒழுங்கான—எவ்விதத்திலும் பழுதுபடாத—கப்பல்களே செல்லுமாறு "நவாத்யட்சன்" பார்த்துக்கொள்ள வேண்டும். அதிகாரியின் முன்னுத்திரவின்றி, எவரும் கப்பல்களில் ஏறி ஆற்றைக் கடந்து செல்லக்கூடாது. மற்றும் கப்பல்கள் ஆற்றைக் கடப்பதற்குரிய இடமும் நேரமும் குறிக்கப்பட்டிருந்தன. இதனை மீறி நடந்தவர் தண்டிக்கப்பட்டனர். முன்னுத்தரவு பெறுமல், ஆனால் குறித்த நேரத்தில் செல்லும், ஒரு கப்பலில் ஏறிச் செல்வோன், முன்னுத்திரவு பெறாத குற்றத்திற்காக 26¾ பணம் அபராதமாக விதிக்கப்பட்டான். ஆனால் வியாபார அபிவிருத்தி, பொது ஜன நன்மை இவைகளை உத்தேசித்து, மேற்கண்ட விதிகளுக்குச் சில விலக்குகளும் இருந்தன. உதாரணமாக, வலைஞர்கள், கட்டை, புல், புஷ்பம், பழம், கறிகாய் இவைகளை எடுத்துக்கொண்டு வருவோர்—செல்வோர், சந்தேகிக்கப்பட்ட குற்றவாளிகளைத் தொடர்ந்து செல்லும் உத்தியோகஸ்தர்கள், சேனைகளுக்கு வேண்டிய பொருள்களை எடுத்துச் செல்வோர் ஆகிய இத்தகையோர் எந்நேரத்திலும், இலவசமாகக் கப்பலேறி ஆற்றைக் கடந்து செல்லலாம். இவர் தவிர, பிராமணர்கள், துறவிகள், குழந்தைகள், நோயாளிகள், இராஜ தூதர்கள், கர்ப்ப ஸ்திரீகள் ஆகியோர் இலவசப் பிரயாணச் சீட்டு பெற உரியவராயிருந்தனர். இந்நாட்டிற்கு அடிக்கடி வந்துகொண்டிருந்த அந்நிய நாட்டு வியாபாரிகளும், உள்ளூர் வியாபாரிகளுக்கு நன்றாகத் தெரிந்திருந்த வியாபாரிகளும் இலவசமாகத் துறைமுகத்தில் வந்திறங்க அநுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

### "நாவாத்யட்சன்" கடமைகள்

புயற் காற்றாலோ அல்லது வேறு காரணத்தாலோ பழுதுபட்டுத் துறைமுகத்திற்கு வந்து சேரும் கப்பல்களைத் தகப்பன் போல் 'நாவாத்யட்சன்' கவனிக்க வேண்டுமென்று விதி இருந்தது. இடைவழியில் ஜலத்தினால் பழுதுபட்டுப் போன சாமான்களைச் சுங்கவரியினின்று விலக்கவும் இவனுக்கு அதிகாரமிருந்தது. மாலுமிகளில் வேண்டிய பேர் இல்லாமையினாலேயோ, அல்லது கப்பல் சரியாகப் பழுதுபார்க்கப் படாமையினாலேயோ, அக்கப்பல்களில் ஏற்றிக்கொண்டு வரப்படும் சாமான்கள் பாழடைந்து போய்விட்டால், அதற்கு 'நாவாத்யட்சன்' நஷ்ட ஈடு கட்டிக் கொடுக்க வேண்டும். இந்தக் கப்பல்கள் அரசாங்கத்தினுடையவையே ஆதலால், இவைகளினால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு அரசாங்கத்தாரே ஈடு செய்ய வேண்டுமென்ற இந்த ஏற்பாடு எவ்வளவு அழகாய் இருந்ததென்பதை நேயர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

கொள்ளைக்காரர் கப்பல்களையும், சத்துரு தேசங்களுக்குச் செல்லும் கப்பல்களையும் அழித்துவிட "நாவாத்யட்ச"னுக்கு அதிகாரம் இருந்தது. தவிர, பிறருடைய மனைவியை அல்லது மகளை அபகரித்துச் சென்றவர், பிறருடைய சொத்தை எடுத்துச் சென்றவர், சந்தேகிக்கப்பட்ட நபர்கள், எவ்வித மூட்டையும் இல்லாதவர், தம்மிடத்திலுள்ள சாமானை மறைக்கப் பார்ப்போர், சமீபத்தில் துறவியானோர், வியாதியால் பீடிக்கப்படுவதாகப் பாசாங்கு செய்வோர், பயமடைந்தவர்போல் காணப்படுவோர், ஆயுதங்களையோ, வெடி மருந்துகளையோ, விஷப்பொருள்களையோ எடுத்துச் செல்வோர், நீண்ட தூரத்திலிருந்து பிரயாணச் சீட்டின்றி வந்தோர் ஆகிய இத்தகையோரை "நாவாத்யட்சன்" கைது செய்யலாம்.

மேலே கூறியவற்றால், சுமார் இரண்டாயிரத்து இருநூறு வருஷங்களுக்கு முன்னிருந்தே கப்பற்றொழிலும், கப்பல் வியாபாரமும் இந்தியாவில் மிகச் செழுமையாக நடந்து வந்தன வென்பது நன்கு புலப்படும். முக்கியமாக மௌரிய வம்சத்தினர் ஆண்டு கொண்டிருந்த காலத்தில், இந்தியாவுக்கும், வெளி நாடுகளுக்கும் நெருங்கிய வியாபாரச் சம்பந்தம் இருந்தது. அந்நிய நாட்டார் பலர் வியாபார விஷயமாக இந்தியாவுக்கு வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருந்தனர். இவர்களை, மரியாதையுடன் வரவேற்று, இவர்களுக்கு வேண்டிய இடம், உணவு, அவசியமானால் வைத்திய



(7)

# அறிவியல் பகுதி

## எலும்பைக் கொண்டே உயிரைப் படைத்தல்

('டெய்லி ஹெரால்டு' பத்திரிகையிற் கண்டதின் சாரம்.)

ஆராய்ச்சி யென்பதைக் கட்டிக் கடலி லெறிந்து விட்டு விரக்தி வேதாந்த போதை பருகி நம்நாடு தூங்கிக் கொண்டிருக்க, மேல் நாடுகளில் வெகு தீவிரமாக நடந்துகொண்டிருக்கும் பலவித ஆராய்ச்சிகள் மக்களைத் திடுக்கிடச் செய்கின்றன. திரு. டபிள்யூ மார்லி மார்டின் என்னும் ஆண்டோர் விஞ்ஞான விற்பனரது உயிராராய்ச்சியால் 'இனி அசாத்திய மென்பதே உலகிலில்லை' என்று நாம் தீர்மானிக்கவேண்டி யிருக்கிறது.

சுண்ணாம்புக் கல்லில் ஜீவாதார சக்தி புள்ளதென்றும், அதினின்றும் எப்பிராணியையும் சிருஷ்டிக்கலாமென்றும், பூமியின் கீழ்ப் புதைந்து கிடக்கும் ஜீவாங்குரமானது ! (ஜீவமூலை), அழிந்தனவாகக் கருதப்படும் பொருள்களிலிருந்து மீன், பல்லி முதலிய சிறு பிராணிகள் உற்பத்தியாதற்குக் காரணமாயுள்ளதென்றும் அவர் தமது நுண்ணிய நோக்கக் கண்ணாடியைக் கொண்டு செய்த ஆராய்ச்சியிற் றெளிந்துள்ளார்.

டெயிலி ஹெரால்டு பத்திராதிபர் இது பெரிய அற்புதம் என்றும், ஆகவே நம்பத்தகாததென்றும் கூறினார். ஆனால் அவ்வாராய்ச்சியாளர் தாம் கண்டறிந்ததைத் தமது கண்ணாடியின் வாயிலாக அவருக்கு விளக்கியபின் அவர் நம்பினார். இறந்துபோன பிராணி யொன்றின் எலும்புக் கூட்டைக் காட்டி, அது பாறைகளில் வெகுகாலம் கிடந்ததாகவும், பின் ஜீவாங்குரத்தினால் புதிதாக உற்பத்தியாகிப் பிறகு இறந்ததாகவும் கூறினார். ஜீவாங்குரத்தினின்றும் சிறு குமிழிகள் குதித்துக் கிளம்பினதையும் அவற்றிலிருந்து ரூபம் தோன்றினதையும், அந்த ரூபம் அசையும் சக்தி பெற்றதையும் அவர் நேரிற் கண்டாராம்.

பல விஞ்ஞானிகள் இவரது ஆராய்ச்சியின் முடிவுகளைக் கண்டுகொண்டு அவற்றை விளக்கித் தாமே கண்டுபிடித்தாகச் சாதிப்பரென்னுங் காரணத்தால் இவர் தமது ஆராய்ச்சியின் வழிகளை இப்பொழுது வெளிப்படையாகக் கூற இணங்கவில்லை.

ஆயினும், கூடு அழிகிறதே யொழிய அதனுள் தங்கிய உயிர் எக்காலத்தும் அழிவதில்லை யென்றும், கூடு அழிந்த ஒரு பிராணியின் ஜீவாங்குரம் திரும்பவும் வேற்றுருக் கொள்ளத் தயாராயுள்ளதென்றும் இவர் சாதிக்கிறார். பாறையிற் றாம் கண்டுபிடித்த ஜீவாங்குரத்திலிருந்து பல உயிர்ப் பிராணிகளின் ரூபங்களை இவர் சிருட்டித்தாராம். சீமைச் சுண்ணாம்பைப் பரீக்ஷித்ததன் பயனாய்ச் செடியை விருத்தி செய்தாராம். அதன் பின்னரே "ஏன் இப்படியே மற்ற ஜீவராசிகளையும் விருத்தி செய்யக் கூடாதென ஆராயப் புகுந்தாராம்" இது மட்டுமோ? "என்றைக்காவது மனிதனையும் கல்லிலிருந்து நான் சிருஷ்டிப்பேன் என்று நம்புகிறேன்" என இவர் திடமாகக் கூறுகிறாராம். என்னே விந்தை! என்னே அறிவின் போக்கு!!

[70-வது பக்கத் தொடர்ச்சி]

உதவி முதலிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கென்றே தனியாகச் சில உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருந்தனர். சந்திரகுப்தனுடைய அரசாங்க வருமானத்தில், இறக்குமதித் தீர்வை ஒரு முக்கிய அம்சமாயிருந்தது என்ற ஒரு குறிப்பைக் கொண்டு அக்காலத்தில் அந்நிய நாட்டுக் கப்பல் வியாபாரம் எவ்வளவு சிறப்பாக நடைபெற்று வந்ததென்பதை உணரலாம்.

## புழுவிலிருந்து மனிதர் தோன்றினரா?

### மாந்தரது எதிர்காலக் கதி

(திரு. வெல்ஸ் அவர்களது நூதன ஆராய்ச்சி)

விஞ்ஞான சாஸ்திரத்தின் தற்காலப் போக்கை நோக்கின் மனிதரது உயிரையும் ஜீவியத்தையும் பற்றிய இரகசியத்தையும் ஆராய்ச்சி வல்லுநர் கண்டறியாது விடாரென்னும் துணிவுக்கே நாம் வரவேண்டி யிருக்கிறது. இது சம்பந்தமாக மேனாட்டு அறிஞர் திரு. எச். ஜி. வெல்ஸ் மனித உயிரின் தத்துவத்தைப்பற்றித் தாம் எழுதியுள்ள புத்தகத்தில் கூறுவதைக் கவனிப்பது மிகவும் பயன் தரக்கூடியதாயுள்ளது.

ரசாயன முறையால் உயிர்கொடுக்க முடியா

தெனக் கூறுவதற்கில்லை. அது முடியுமா வென்பதைச் சொற்ப காலத்திற் கண்டு கொள்ளலாம். சாதாரணமான கோதுமையிலிருந்து எண்ணிறந்த அபூர்வப் பொருள்களை உண்டாக்குவது போல் மனிதரையே உற்பத்தி செய்ய முடியினும் முடியலாம். ஒரு பொருள் உற்பத்தியான இடத்தையும் விதத்தையும் கண்டுபிடித்தால் அதை உற்பத்தி செய்வது அசாத்தியமாகாது. இரட்டைக் குழந்தைகளைப் பெறும் வழியை ரசாயன நிபுணர் கண்டு பிடித்துள்ளனர். முட்டைக் கருவை இரண்டாய்ப் பிரித்து இரட்டைக் குஞ்சுகள் பொறிக்கச் செய்வது போலவே மனிதக் கருவையும் செய்யலாம்.

மக்கள் சிறுவயதி லனுஷ்டிக்கும் தேகப் பயிற்சிகளே பிற்கால வன்மைக் காதாரமாகிற தாயினும் மனிதரது ஆயுளை நீடிக்கச் செய்துகொள்ளுவதற் கேற்ற வழி யொன்றும் தோன்றவில்லை.

மரணத்துக்குப் பின் உயிர் அடையும் கதியைப் பற்றியும் ஒன்றும் நிச்சயமாகக் கூற வியலவில்லை. ஆனால் உயிர்கள் உடலோடு மடிவதில்லை. நதிகள் கடலை நாடி யோடுவதைப் போல் உயிர்களும் ஒரு இடத்தை நாடிச் சென்றுகொண்டே இருக்கும்.

மனிதரது உற்பத்தியைப் பற்றிக் கூறுங்கால் ஆயிரங் கோடி வருடங்களுக்கு முன் அணுக்களிலிருந்தோ வேறெவ்விதமோ உண்டான புழுக்களிருந்தன வென்றும், அவைகள் 300 கோடி வருடங்கட்கு முன் நீர்வாழும் மச்சங்களாக மாறின வென்றும், அம்மச்சங்கள் பின்னர் நீரைக் கடந்து கரை சேர்ந்து நிலத்திலூர்வனவாகவும் மிருகங்களாகவு மாயின வென்றும், மிருகம் நாளடைவில் குரங்காகி மரத்தில் ஜீவிக்கத் தலைப்பட்டதென்றும், அக்குரங்கு உருவங்கள் பல பெற்று மனிதக் குரங்காயிற்றென்றும், அதினின்றும் மனிதன் தோன்றினனென்றும் அவர் அபிப்பிராயப்படுகிறார். இந்த விதமான மாறுதல் எத்தனையோ கோடிக் கணக்கான வருடங்களிலேற்பட்ட தென்பதையும் அத்தனைக் கோடி வருடங்கட்கு முன்னும் நாம் புழுக்களாகவோ, வேறெந்த உருவத்தோடோ இருந்தோமென்பதையும் மறக்கக்கூடாது. இதனால் உயிர் எப்பொழுதும் மறிப்பதில்லை யென்பதை யறியலாம். அது சாஸ்வதமாகவே இருந்து, மாறி மாறிப் பல உருவங்களெடுத்தே ஜீவித்திருக்கிறது.

இங்ஙனம் தோன்றிய மாந்தரது எதிர்காலக் கதியென்ன? இந்தக் கேள்வி ஒருவித நம்பிக்கையை மட்டுமன்றி பயத்தையும் கொடுக்கின்றது. பயத்துக்குக் காரணம் ரசாயனம் முதலியவற்றின் ஆராய்ச்சியில் மனிதரடைந்து வரும் அபரிமிதமான அபிவிருத்தியே. மானிட வாழ்க்கை எண்ணிறந்த மாறுதல்களை அடைந்திருக்கிறது, அடைந்து வருகிறது, இனியும் அடையும். ஆனால், அரசியல், பொருளாதாரம், நாகரிகம் முதலிய துறைகளில் அபிவிருத்தி யேற்பட்டிருக்கிறதே யொழிய, மனிதர் நெடு தேகத்துடன் நீடு வாழ்வதற் கேற்ற வது இன்னும் கண்டுபிடிக்கப் பட்டிலது. மேற் சொன்ன வழிகளிலும் கூடக் கல்வியில் வல்ல ஒரு கூட்டத்தாரே முற்போக் கடைந்துள்ளனர். ஏனையோர் பாமரராகவே அஞ்ஞானத்தி லழுந்திக் கிடக்கின்றனர். அத்தகையோர் முற்போக்கடைந்துள்ள பகுதியினர்க்கடங்கி அவர்களாலேயே ஆளப்பட்டும் நடத்தப்பட்டும் வருகின்றனர். ஆழ்ந்து யோசிக்கின், இன்னும் சொற்ப காலத்தில் குடியிருக்கவும் இடமின்றி ஜனங்கள் பெருந்துத் திண்டாடுவார்களென்றும், மக்கள் புத்திரரைப் பெற்று வளர்க்க விரும்பாரென்றும், அனைவரும், கஷ்ட ஜீவியம், மரணம் முதலியவற்றைப் பற்றிய சிந்தனையை யொழித்து உல்லாச வாழ்க்கையையே நாடுவரென்றும், எங்கும் உல்லாசக் கூத்தாடிகளே நடனம் புரிந்து மயங்கிக் கிடப்பரென்றுமே எண்ணிப் பயப்பட வேண்டியிருக்கிறது. இத்தகைய அபிப்பிராயங்களை அறிஞர் வெல்ஸ் கொள்ளுகிறார்.

ஒருவர் சொல்லுவதெல்லாம் உண்மையா யிராது. சொல்லுவதெல்லாம் பொய்யாகவும் இருக்க முடியாது. நீ விரும்புபவர் சொல்வது என்று எதையும் அப்படியே விழுங்கி விடாதே. நீ வெறுப்பவர் சொல்வதென்று காதை யடைத்துக் கொள்ளாதே. எதையும் காதால் வாங்கு; கருத்தில் வை; அறிவென்னும் கருவியைக் கொண்டு ஆராய்ந்து பார். சரியாயின் கொள்ளு; இல்லையேல் தள்ளு.






## ஒரு சம்பாஷணை

S. M. வீராசாமி, மாணவர், குருவராஜப்பேட்டை

1931-ஆம் வருடம் மே மாதம் 9-ஆம் தேதியன்று சுமார் 5 மணிக்குச் சிவ ஞானம் என்னும் சுமார் 14 வயதுடைய சீரிய செல்வக் குழந்தை கல்விச்சாலை முடிந்தவுடன் தனது புஸ்தகங்களை வழக்கமாக வைக்கவேண்டிய இடத்தில் வைத்து விட்டுச் சுகமான காற்றை உட்கொள்ளக் கருதி உல்லாசமாக உலாவ நந்தவனத்தின் அருகே சென்று, பள்ளியில் பட்ட கஷ்டங்களை மறந்து, இயற்கை யழகையே வியந்து, ஈசுவரத் தியானத்தில் மூழ்கியவனாய் நந்தவனத்தில் இங்கும் அங்கும் உலாவினான். "என்னே இயற்கையின் அழகு என்னே! பச்சைப் பசேலென்ற இவ்வழகிய நிறத்தை எவ்வாறு இப் பூஞ்செடிகள் அடைந்தனவோ? இத்தகைய பொலிவு வாய்ந்த நிறமொன்றினை மனிதர் உண்டாக்கல் ஆகுமோ? களங்கமற்ற இவ் வானகத்தில் சூரியன் ஒருவனே தனி யரசு செய்து, தன் கதிர்களைப் பொன் கம்பிகள்போல் நீட்டி, தரணியெல்லாம் அலங்கரிக்கின்றான் அக் கதிர்கள் தம்முடலைத் தீண்டியவளவில், இப் பயிர்களும் செடிகளும், குழந்தைகள் மெய் தீண்டலினால், பெற்றவர் மனமும் உடலும் இன்புறுவது போல இன்புற்று, கடவுளைத் துதி செய்கின்றனவே! மந்தமாருதத்தில் இப் பூஞ்செடிகளின் பைந்தாட்கள் ஒன்றோடொன்று உரசுவதால் உண்டாகும் மெல்லிய ஓசையானது குழல் முதலியவற்றின் ஓசைகளையெல்லாம் பழித்துப் பன்மடங்கு இன்பம் பயக்குவதன்றோ? மனித உயிர்களுக்கெல்லாம் இறைவன் தந்தையாய் விளங்குவதுபோலவன்றோ இவ் வுயிர்களுக்கெல்லாம் சூரியன் விளங்குகின்றது" என்றிவ்வாறு எண்ணமிட்டு உலவினன் நெடுநேரம்.

இருளானது தனதரசைச் செலுத்த மேலோங்கிற்று. கதிரவன் கதிர்களின் வேகத்தைத் தணித்து, இன்னலுற்ற உயிர்களுக்கு இன்பம் அளித்தான். மயங்கிக் கிடந்த மலர்க் கொத்துக்களெல்லாம் தாயை வெகுநாழிகைத்திற் கண்ட மகவானது ஓடோடி அவளைத் தாவி அணைத்தல்போல, சந்திரனது முகத்தைக் காணலும் கரையிலாக் களிப்பையடைந்தன. இவ் வாலிபன் இக்காக்ஷிகளைக் கண்டு களிப்புடன் வீட்டிற்குத் திரும்பினான். வீட்டை நோக்கி வருங் காலையில், வீதியில் ஒரு புறம் பெண்மணிகள் தங்கள் தங்கள் வீடுகளின் முன்னணியில் விசித்திரமான கோலங்கள் போடுவதையும், மற்றொரு புடை ஜலங்கொண்டுவரச் சிவாலயத்திற்குச் சென்ற சீரிய தாய்மார்களின் வருகையை எதிர் பார்த்துக்கொண்டிருந்த குழவிகளின் இனிய தொனிகள் எழும்புவதையும், பெரியோர் செய்தற்றொழிலை விட்டு வெளுத்த ஆடையோடு வெண்ணீறுடன் சிவபெருமானை வெட்கமுறுமாறு போலக் கூட்டங் கூட்டமாய் விநாயகராலயத்தின் முன்னணியில் இருந்தவண்ணம் "மகாநாடு! மகாநாடு!!" என்று உரத்த குரலுடன் உல்லாசமாக வார்த்தையாடிக்கொண் டிருப்பதையுங் கண்டு களிப்புக் கொண்டான். சற்று நேரத்திற் கெல்லாம் ஒரு நீண்ட தாளில் செங்குந்தர் இரண்டாவது மகாநாடு, வாலிபர் மகாநாடு, காஞ்சீபுரம் என்று அச்சிட்டுக் கோபுர வாயிலில் ஒட்டியிருப்பதைக் கண்டான்; ஆச்சரியங் கொண்டான். இன்னதென்று தோன்றவில்லை. உடனே தன் தந்தை படித்த பெரியார் ஆகையால் அவரைக் கேட்டுச் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ளக் கருதி வீட்டுக்குச் சென்றதும் "அம்மா! அப்பா எங்கே? நான் பள்ளியை விட்டு வரும்போதும் இல்லை; இவ்வளவு நேரம் ஆகியும் வரவில்லையே. எங்கேயாவது வெளியூருக்குச் சென்றாரா?" எனத் தாயை வினவினான்.

தாய்:—குழந்தாய் கண்மணி! அவர் குடும்ப அலுவலாக வெளியில் சில காரியங்களைக் கவனித்து விட்டு இப்போதுதான் வந்து கைகால்களை அலம்பிக்கொண்டு தம்பி மணிவாசகனுடன் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்தார். மணி 7 ஆய்விட்டதே வாசக அறையில் சென்று பார்.

மகன்:—அம்மா! அப்படியே செய்கிறேன்.

மகன் சென்று பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. ஆனால் மேஜையின்மீது நீல நிறங் கலந்த மேலட்டைமேல் பாலசுப்ரமண்ய உருவப் படம் இருந்ததைக் கண்டான்; ஆவலுடன் கையிலெடுத்தான்; தலைப்பில் இருந்ததை வாசித்தான்.

"செங்குந்த மித்திரன்" என்றிருப்பதைக் கண்டான்; சற்று நேரம் மௌனமாக நின்றான். "ஆ என்ன ஆச்சரியம்! இன்று பள்ளியை விட்டதுமுதல் நான் என்றும் கேட்டும் கண்டும் இராத இவ்வார்த்தை எங்குச் சென்றாலும் கண்ணுக்குக் காணப்படுகிறது. "செங்குந்தம், செங்குந்தம்" என்ற ஓசை காது செவிடுபடும்படி ஒலிக்கிறது. இதில் ஏதோ ஒரு விசேஷம் கட்டாயம் இருந்தே தீரவேண்டும். மேலும் ஏதோ நன்மையும் இறைவனருளால் விளையும் என்றும் எண்ணுகிறேன்" என்று அப்படியே இருந்தவண்ணம் யோசித்தான். மறுபடியும் தான் கொண்ட சந்தேகத்துடன் வெளியே வந்தான். தந்தையைத் தெருவாயிற் புறத்தண்டைக் கண்டான், கண்டதும் 'ஆ! என்னருமைத் தந்தையே' என்று மேல் விழுந்து தாவினன்.

தந்தை:—அப்பா! அருமைக் கண்மணீ நீ ஏதோ ஆச்சரியமான விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கிறாய் போல் உனது முகத்தினின்றும் வெளியாகிறது. உடனே தெரிவி.

மகன்:—ஆம் என் அருமைத் தந்தையே! உமக்கு எப்படி நான் தெரிவிக்காமலேயே தெரிந்தது? அதை எனக்குச் சொல்லவேண்டும்.

தந்தை:—கண்ணே! நீ அரிய பெரிய விஷயங்களையெல்லாம் தெரிந்துகொள்ள நினைக்கின்றாய். ஆனால் அவ் விஷயங்களைப் பற்றிச் சொன்னால் உனக்கு விளங்காது. நீ பெரிய வகுப்புகளுக்குச் சென்றால் சுலபமாகத் தெரிந்துகொள்வாய். வேறு விஷயங்களைப்பற்றிக் கேட்டால் சொல்லுகிறேன்.

மகன்:—என்னருமைத் தந்தையே என் மனதில் தீராச் சந்தேகம் ஒன்றுளது. அதை விவரமாகச் சொல்லி முடிக்கவேண்டும்.

தந்தை:—அப்படியே வேண்டியவற்றை வெளியிடு.

மகன்:—அப்பா, நான் பள்ளியை விட்டு வெளியில் உல்லாசமாக உலவிவிட்டு வருகையில் முழுமுதற் கடவுள் என்று சொல்லப்பட்ட விநாயகராது ஆலயத்தின் முன்னணியில் பெரியோர்கள் கூட்டங் கூட்டமாக நின்றுகொண்டு, 'காஞ்சிபுரத்தில் செங்குந்தர் மகாநாடு வாலிபர் மகாநாடு' என்றும், 'தன் நலம் கருதாமல் பிறர் நலங் கருதியே யுழைக்கும் திருவாளர் சபாபதி வள்ளல் அவர்கள் தலைமை வகிப்பார்' என்றும் 'சென்ற மகாநாட்டில் தொண்டர்படைத் தலைவராக இருந்து நடத்திய இளஞ் சிங்கமான S. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள் வாலிபர் மகாநாட்டிற்குத் தலைவராக விளங்குவர்' என்றும் உரத்த குரலுடன் உல்லாசமாகவும் ஆநந்தமாகவும் ஒருவர்மேலொருவர் வீழ்ந்து உரையாடிக் கொண்டார்கள். நான் அதைக் கண்டு அர்த்தம் விளங்காமல் ஆச்சரியங் கொண்டேன். ஏனெனில், யான் செங்குந்தர் என்ற பதத்தையோ, மகாநாடு என்ற பதத்தையோ இது வரையில் கேட்கவோ படிக்கவோ இல்லை. ஆனதால் என் மனமானது அதன் விருத்தாந்தத்தைத் தெரிந்து கொண்டால்தான் சமாதானத்தை யடைந்து ஆநந்திக்கும்.

தந்தை "அருமைக் குழந்தாய், கை கால்களை சுத்தம் செய்துகொண்டு ஈசுவரத்தியானம் செய்துவிட்டு உன் சிநேகிதன் குணபூஷணனையும் அழைத்துக்கொண்டு வந்து அருகில் உட்காரு, விவரமாக விரித்துரைக்கிறேன்" என்றார். தநயன் காலக்கடன் முடிந்ததும் சிநேகிதனோடு தந்தையருகில் வந்து பூரணச்சந்திரனை அச்சம் அடையும் வண்ணம் அழகிய முகத்துடன் "சித்திரப்பாவையினத்தகவடங்கி செவிவாயாக நெஞ்சுகளனாக கேட்டவை விடாதுள்ளத் தமைத்து" என்றாற் போல தந்தையின் வாயினிடமாகச் சொரியப்போகும் சொற்பொழிவைக் கேட்டு ஆனந்திக்க ஆர்வத்தோடு மரப்பொம்மைபோல் தந்தையின் வாயை இமைகொட்டாவண்ணம் பரமானந்தத்துடன் உற்றுக் கவனித்துக்கொண்டு இருந்தான்.

தந்தை:—என்னருமைக் குழந்தைகளே உங்களது நுட்ப புத்தியையும் ஆர்வத்தையும் ஊக்கத்தையுங் கண்டால் நீங்கள் பிற்காலத்தில் நங்குலத்தின் உண்மைத் தொண்டர்களாக வீரத்தோடு முன் வந்து மகத்தான நன்மை புரிவீர்கள் எனவே தோன்றுகிறது. உங்களுக் கேர்பட்ட சந்தேகத்தைத் தெளிவாக தெரிவிக்கிறேன் கவனமாகக் கேளுங்கள்.

தந்தையார் நம்மவர் சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்லத் தொடங்கினார்:

ஆதியில் நம்மவர்கள் கைலாய பரம்பரையைச் சார்ந்தவர்களென்றும், மகா வீரமுடையவர்களென்றும், முசுமுகன் என்னும் சக்கரவர்த்தியின் வேண்டுகோளுக் கிணங்கி நவவீரர்களாகிய வீரவாகு வாதியர்களை இறைவன் துணையாக அனுப்பினனென்றும் அவர்களது சகாயத்தால் அம் மன்னர் பிரான் பல நாடுகளை வென்று செங்கோலோச்சினன் என்றும் கூறுவர். குந்தமென்னும் ஈட்டியினைத் தங்களது சிறப்பாயுதமாகக் கொண்டு இருந்தமையின் செங்குந்தர்களென வழங்கப்படலானர் என்று சரித்திர வாயிலாகவும் ஆராய்ச்சியின் மூலமாகவும் அறியக் கிடக்கின்றது. அவ்வளவு உயரிய சீரிய மேம்பாடான நிலைமையிலிருந்த நாம் இன்று இருக்கும் நிலைமையைக் கவனித்தால் கன்மனமும் கரையாமலிருக்க முடியாது. அதாவது நமது தாய் நாடாகிய இப்பாரத பூமியில் கணக்கிலடங்காச் சமூகங்கள் இருக்கின்றன. அவைகளில் நமது சீரிய சமூகமும் ஒன்று. தற்சமயம் எல்லாச் சமூகங்களிலும் ஆடவரும் பெண்டிரும் கல்வி கேள்விகளில் மேம்பாடெய்திச் சுகமாக ஆனந்தமாகச் செல்வாக்காகச் சுகபோகங்களை யனுபவித்துக்கொண்டிருக்கிறார்களொருபக்கம். மற்றொரு பக்கம் நம்தேசத்தலைவர்கள் ஏழை மக்களாகிய நம்போன்றார்களுக்காகப் பிராணத்தையும், மானத்தையும் பொருட்படுத்தாது தமக்கு எவ்வளவு இன்னல் வரினும் இன்பமெனக் கருதி, ஸ்வயராஜ்யத்தியற்காக அரும்பாடு பட்டுக்கொண்டு வருகிறார்களென்பதை யறியாதவரே கிடையாது. ஆனால் நமது செங்குந்தர்களோ ஒரே தூக்கமாக கும்பகர்ணனைப் போல் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். தூக்கத்தினின்றும் எழுப்ப இடைவிடாது உலவிவரும் நமது "செங்குந்தமித்திரனை" அன்புடன் வரவேற்கிறார்களில்லை. அந்தோ பரிதாபம்! எப்போதுதான் இவர்கள் கஷ்டத்தினின்றும் நீங்கிக் களிப்பை மற்றவர்கள் போல் அடைவார்களோ தெரியவில்லை. இத்தியாதி காரணங்களைக் கொண்டு நம் குலத்திலவதரித்த சில பெரியோர்கள் நம்மை முன்னுக்குக் கொண்டுவரக் கருதிச் சுயநலங் கருதாது பிறர்நலங் கருதி எனதொரு வாயால் சொல்லி முடியாதபடியும் எழுத நினைத்தால் மித்திரனே இடந்தரா வண்ணமுமான அருந்தொண்டு புரிந்துவருகிறார்கள். அன்னவர்கள் தென்னிந்தியாவிலுள்ள நமது ஜனங்களை வருடத்துக் கொருமுறை சிறப்பான இடத்தில் ஒன்று கூட்டி உலகமே இன்னதெனவறியாப் பாமர மக்களாகிய நமக்குத் தேசத்தின் நிலைமையையும், மற்ற சமூகங்களின் அந்தஸ்தையும், நமது பரிதாபகரமான சீர்கேடான ஒழுக்கத்தையும் எடுத்தோதி நம்மையும் இவ்விருபதாம் நூற்றாண்டின் மனிதர்களாகச்செய்ய முற்பட்டிருக்கிறார்கள். நமது அபிப்பிராயங்களை நேர்முகமாகத் தெளிவாகப் பேசி முன்னேற்றத்திற் கேதுவான மார்க்கங்களைக் கண்டுபிடித்து அதன்படி ஒழுகி மேலான பதவியை யடையும் வண்ணம் இப்படி ஒன்றுகூடும் வைபவத்திற்கே "மகாநாடு" என்று பெயர்.

மகன்:—அப்பா! இன்று நாங்கள் எவ்வளவோ தெரிந்துகொண்டோம். ஆனால் இதற்கு முன் இம்மாதிரியான மகாநாடு எங்கேயாவது நடந்தேறியதா?

தந்தை:—ஆம் வியாபாரத்திற்கு முக்கிய ஸ்தலமும் செங்குந்தருள் செல்வாக்கு மிக்கவர்களையும், வீரதீரர்களையு முடையதும், நீர்வளம் நிலவளம் பொருந்தியதும், புண்ணிய நதியாகிய காவிரியாற்றின் பெருக்கினையுடையதுமான ஈரோடுமா நகரில் ஸ்தாபித்த "செங்குந்த நகர்" என்னும் பந்தலில் நடந்தேறியது. அதனால்தான் இதற்கு இரண்டாவது செங்குந்தர் மகாநாடு எனப்பெயர் ஏற்பட்டது.

ம:—அந்த மகாநாட்டிற்கு நீர் சென்றிருந்தீரா?

த:—இல்லையப்பா நான் அவ்வமயம் ஜ்வரத்தினாலும் அநேக அலுவல்களாலும் இம்சிக்கப்பட்டிருந்தேன்.

ம:—ஆனால் இம் மகாநாட்டிற்கு அவஸ்யம் அம்மாவும் நீரும் சென்று கண்டு களித்து வாருங்கள்.

த:—அவஸ்யம் சென்று வருகிறேன். மேலும் இதுசமயம் பெண்களது முன்னேற்றத்தைத் தான் முதன்மையாகக் கருதப்படுகிறதே. அழைத்துச் செல்லாமல் இருக்க முடியுமா. அவர்களை யழைத்துச் செல்வது அத்தியாவஸ்யம்.

சிவ:—நண்பா உம்முடைய தாயாரையும் நமது சகோதரிகளையும் அழைத்துக் கொண்டு நீரும் இவருடன் சென்று காக்ஷிகளைக் காணவேண்டும்.



குண:—அப்படியே செல்வோம்; உம்முடைய வார்த்தைக்கு மறுவார்த்தை யுண்டோ?

ம:—அப்பா! நமது குலம் தற்சமயம் இருக்கும் நிலைமையைக் கவனித்தால் மனம் வருத்தமடைகின்றது. ஆ! என்ன பரிதாபம் நமது குலத்தில் பிறந்த சகோதரர்களா கஷ்டத்தை யனுபவிக்கிறார்கள்? இறைவன் எப்போது இன்பம் அளிப்பானோ, எப்போது நன்மை உண்டாகுமோ, நாங்களும் மனிதர்கள் என்று நம்மவர்கள் எவ்வளவும் கூறிக்கொள்ளுவார்களோ அறியேன்.

ம:—அப்பா இவ்வளவுக்கும் காரணம் என்ன?

த:—கல்வியில்லாக் கொடுமை, கல்வியில்லாக் கொடுமை. மற்ற சமூகங்களில் படித்தவர்கள் 100-க்கு 50பேர், 80 பேர் நன்கு வாசித்து ராசாங்க விஷயத்தில் தேர்ச்சி பெற்றிருக்க, நமது குலத்தின் ஆறு லக்ஷம் ஜனங்களுக்கு 40-க்குள்ளாகவே B. A. பட்டதாரிகள் இருப்பதாகத் தெரிகிறது என்று சொல்லும்போதே மனமானது வெட்கமுறுகிறது. என்னைப் போன்ற வயதுசென்றவர்களுக்கே அப்படியாயின் உன்னைப் போன்ற வாலிபச் சிங்கங்களுக்கு எப்படியிருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். தவிர, நமது பெண்மக்களைப் பற்றிக் கவனித்தாலோ ஆறாத்துயரமடைய வேண்டி வரும். பெண்களில் ஒருவராவது படித்து முன்வந்தார்களில்லை. மற்ற சமூகங்களில் பெண்களும் பலர் B. A. பட்டதாரிகளாக இருக்கிறார்கள். இதையெல்லாம் எடுத்துக் கூறும் போது அறிவுள்ள சீடர்களுக்கு மனத்துயரம் ஏற்படாமலிருப்பதற்கில்லை. ஆனால் உண்மையைக் கூற வேண்டிய விடத்தில் கூறித்தானாகவேண்டும். பெண்களுக்குப் போதிய கல்வியறிவு இருந்தாலொழிய நாம் முன்னேற்றம் அடைவது முடவன் கொம்புத்தேனுக் காசைப்படுவது போலும் ஆம் என்பது உண்மை, உண்மை, முக்காலும் உண்மை.

மகன்:—அன்புள்ள தந்தையே! நம்மவர்கள் கல்வியில் அவ்வளவு தாழ்ந்த நிலைமையிலா இருக்கிறார்கள்? சரி, B. A. பட்டதாரிகள் என்றீரே அதை விடப் படிப்பு இல்லையா?

த:-கல்விக்குக் கரையில்லை என்பதை நீ கேள்விப்படவில்லை போலும். அதைவிட வாசிக்கவேண்டிய திருக்கிறது. இப்பொழும் உலகத்தில் B. A. பட்டம் வாங்கினால்தான் சற்று மதிப்பும் கௌரவமும் அடையவும், நானும் ஒரு மனிதன் என்று தைரியமாய்ச் சொல்லிக் கொள்ளவும் முடிகிறது. இல்லையேல் சகல மரியாதையிலும் கொஞ்சம் குறைவுதான்.

ம:—ஆனால் அப்பா! யான் B. A. வரைக்கும் வாசிக்கச் சித்தமாய் இருக்கிறேன். எனது தங்கை மரகதவல்லியையும் நன்கு கல்வியில் தேர்ச்சிபெறச் செய்யவேண்டும். பிற்காலத்தில் என்னாலியன்ற உதவியை நம்மவர்களுக்குச் செய்யத் தயாராக இருக்கிறேன். என் அன்பிற் சிறந்த நேசா, நீயும் என்னுடன் B. A. வரையில் வாசிக்க வேண்டும். உனது

தங்கை கஜவல்லியையும் எனது தங்கைக்குத் துணையாகச் சேர்த்து ஆண்களைப் போலவே அவர்களும் சகல விதங்களிலும் முன்னேற்றம் அடையும்படி இனிப் பிரயத்தனம் எடுக்கவேண்டும்.

தண:—நேசா நீ சொல்வதெல்லாம் சரியே. ஆனால் எனது தந்தை கல்வியறிவில்லாதவர். சில நாட்களுக்கு முந்தியே அவர் என்னைத் தரிசெய்யும்படி வற்புறுத்தியவர். என்னுடைய சொந்தப் பிடிவாதத்திலேயே இவ்வளவாவது வாசித்திருக்கிறேன். என்ன இருந்தாலும் பெற்றோர் அன்புடன் அனுப்புவதென்றால் குதிரைக் கொம்புதான்.

சிவ:—அன்பா! எக்காலத்தில் பகுத்தறிவு என்னும் வித்தானது மனமென்னும் நிலத்தில் வீழ்ந்து முன்னேற்றம் என்னும் பயிர் ஓங்கிச் செழிப்பாக வளரப் போகிறது! இல்லை, இல்லை. முதிர்ந்த கட்டைகளா முன்னேற்றத்தைக் கருதப் போகின்றன. எக்காலத்திலும் எத்தகையவர்களும் நமது பாழான சீர்கேடான நிலைமையைப் பற்றி யோசிக்கப் போகிறது இல்லை. நமது சொந்த முயற்சியினால், தீரத்தினால், வீரத்தினால், ஆண்மையால், உண்மையால் தான் நமது இயக்கத்தை மேலோங்கச் செய்ய வேண்டும். எனது தந்தை சொன்னதைக் கவனித்தால் கல்லாலுக்குக் காசு மதிப்புக்கூட இருப்பதாகத் தெரியவில்லை. கல்வியை நமது ஆஸ்தியாகக் கொள்ளவேண்டும். கல்வியே கருந்தனம். தீரத்துடன் முன் வந்து வாசி. வேண்டிய உதவியையும் என்னால் இயன்றமட்டும் செய்கிறேன்.

த:—அப்படியே செய்வோம். நம்மோடு நில்லாமல் நாளை நாம் காலையில் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகக் கலாசாலைக்குச் சென்று, நம்போன்ற இளஞ் சிறார்களுக்குந் தெளிவாகச் சொல்லி அவர்களையும் நமது இயக்கத்தில் இசைந்து கொள்ளும்படிச் செய்யவேண்டும்.

சி:—அவஸ்யமாய்ச் செய்யவேண்டும். குணபூஷணா, மணி 9-ஆய் விட்டதே. உமது தகப்பனார் சாப்பிடத் தேடிக்கொண்டு வருவார். முன்னதாகவே சென்றுவிடு. அவர் மகா கோபி.

த:—சரி. போய் வருகிறேன்.

(சிவஞானமும் அவன் தந்தையும் இடத்தை விட்டுப் போஜன அறைக்குச் சென்றார்கள்.)

---

# சிறுகதைச் செய்யுட் கோவை

## உண்மையின் பெருமை—அரசனும் கைதிகளும்

[திருவாளர். வை. ச. இராமலிங்க முதலியார், அவர்கள், கண்டாச்சிபுரம்]

திருமலி கமலப் புத்தேள் சிருட்டியின் மனிதவர்க்கத்
தருமிக சிரேட்ட மன்ன துறவுத மரிதே யாகும்
பெருமைகொ ளிவரு முண்மை பேசிடிற் சிறந்தோ ராவர்
அருமையி லருமை வாய்மை யாளனென் றுதலம்மா

உண்மையே மக்கள் யாக்கை யுற்றவர்க் குறுதி நல்கும்
உண்மையே யுலகின் மேலா யொருவனை யோங்க வைக்கும்
உண்மையே யிருமை வாழ்வு முதவிடு மாத லாலே
உண்மையே கடைப்பி டித்து ஒழுகுமி ருலகத் தீரே

உலகினில் வாய்மை யாதி யுத்தம குணங்க ளெல்லாம்
நிலவுத லொழிந்த திந்நாள் நிறைந்த பொய் சூதநீதி
கலகமே மிகுந்த தந்தோ! கயவர்கள் செல்வாக் குற்று
தலைமையை யடைந்திட் டார்கள் தாழ்ந்தது சத்தியந்தான்

சத்தியம் மேன்மை நல்கு மென்பதை யுலகோர் சற்றும்
புத்தியில் வைப்ப தில்லை பொன்றவே வரினும் வாய்மை
சித்தமும் விடுவ தில்லை யெனுநெறி கொண்டால் யாவும்
வெற்றியா மிதனை யிங்கே விளக்கவோர் கதையைச் சொல்வாம்.

முன்ன மீராண்டு கட்கு முன்னராங் கிரீசு தேசந்
தன்னையே யாட்சி செய்தோன் சமரில்மா வீரன் வெற்றி
மன்னவர் மன்ன னான மகாஅலெக் ஸாந்த ரென்போன்
சொன்னய முன்னோன் கிருபை தோய்ந்திடு சிந்தை யாளன்.



தருநிகர் கொடையான் மிக்க சாந்தமே புருவ மானோன்
பெருமையா லெவரும் போற்றப் பெற்றவ னொரு நாளில்
திருமலி தனது ராஜ்யத் தலைநகர்ச் சிறையைக் காண
அருமையாய் விஜயஞ் செய்தா னரச னென்றுணரா வண்ணம். 6

இறையெனத் தெரிந்தி டாம லிவரொரு பார்வை யாளர்
குறையினைக் காண வந்தா ரென்றெணிக் கோதி லாத
சிறையதி காரி மன்னன் றன்னையே யழைத்துச் செல்ல
முறைவழி யாவுஞ் சுற்றிப் பார்த்தனன் முதல்வன் றானும். 7

சிறைச்சாலையோ டெலையுங் கண்டு செல்லுழி யங்க முற்றும்
வேர்த்திட வெயிலில் வேலை செய்திடுங் கைதி யாகும்.
ஆர்த்தர்களவர் தம்மைத் தொல்பெருங் குரிசில் நோக்கிப்
பார்த்தனன் நிற்கச் செய்து பரிவுடன் புகல்வ தானான் 8

'மைந்தர்காள்! நீவி ரிந்தக் கடுஞ்சிறை தன்னிற் போந்த
செய்தியா தறைவீர்? நீதி மன்றினோர் செய்த தீர்ப்பு
பொய்யோசொல்லோ! மெய்ம்மை தானோ!! சத்தியம் புகல்வீ ராயின்
உய்திறன் றுரைப்ப வேந்தன் கைதியின் முதல்வன் சொல்வான். 9

'ஐய! நான் குற்ற வாளி யல்லன்வே றொருவர்க் காக்
கையினான் றன்னைப் பிடித்துக் கடுஞ்சிறை புகுத்தி னார்கள்
மெய்யினுக் காகு மென்னை விடுதலை புரிதல் வேண்டும்
செய்யுமெற் குதவி யென்றான் சிறைமுதற் கள்வனானோன். 10

அன்னதற் பின்னோர் மன்ன னிரண்டவன் றன்னை நோக்கி
'என்னதீச் செய்தாய் இந்த வன்சிறை புகுதற்' கென்ன
'மன்னுமென் பகைவ ரானோர் பொய்வழக் கதனா லென்னை
இன்னல்செய் சிறையி னுய்த்தார் நீதிமா னுதவி யாலே. 11

'ஆதலி லெந்தா! யொன்று மறிந்திலன் சத்தனாகும்
காதலா லென்னை விடுக்கக் கடைக்க ணைக்கருள்தி யென்னச்
சூதுசொல் பவனை நீத்து மூன்றவன் றன்னைச் சுட்டி
'யாதுனை ரணைத்தால் நீதான் சிறையிடை யடைந்த' தென்றான். 12

மன்றமன் னவனை நோக்கி யியம்புவான் மூன்றாங் கைதி
'மன்றினார் தமக்கு மேலாங் களைகளு மிருப்போய்! நியாயங்
குன்றிடப் பொய்ச சான்றிட்டுக் கொலைப்பழிக் குடந்தை யென்று
மன்றமைத்த தீர்ப்பு செய்தான் வஞ்சனை நீதி மானும். 18

'நீதியே தங்கு நாளில் நியாயவான் றானு மேது
ஓதுமென் னிடத்தில் தற்ற முண்மையி லில்லை யையா!
நீதியுஞ் சிறையி னீங்கிச் சுகம்பெறச் செய்வா' யென்றான்
சூழ்ந்தவா மடைத்தபெட்டி யனையனுஞ் சுமடன் மாதோ. 14

ஆங்கதற் பின்னர் நாலாங் கைதியை யரசன் பார்த்து
'ஈங்குநீ வந்தவாறென் கழறுதி' யென்ன 'மேலோய்!
தீங்கினை யறியாத் தேசத் தொண்டன்யான் போலீஸ் செய்யுந்
தாங்கொணாக் கொடுமை யாலிச் சிறையினைச் சார்ந்தே' னென்றான். 15

நால்வரும் புகன்ற மாற்றம் நாமவேற் படையான்கேட்டு
சாம்பினி லைந்தாங் கைதி தன்முகம் பரிவின் நோக்கி
'எப்படுவோ நீதான் செய்த குற்றமென்? புகல்தி' யென்ன
கால்களில் வீழ்ந்து போற்றிக் கழறுவான் திகழ்ச்சி யாவும். 16

'வறுமையால் மிகவு நொந்தேன் பிழைக்கவோர் வழியுங் காணேன்
சிறுமையே பட்டேன் செய்யுந் தொழிலெதுஞ் சிக்க வில்லை
வெறுமையா லுண்டியின்றி மிகவுநான் துன்ப முற்று
திறமையாய்க் கனவான் வீட்டில் திருடவே சென்றே னந்தோ! 17

'திருடிப்போ ராங்கு வைகுஞ் சிலதுகா வலர்க ளென்னை
வெருவிடப் பிடித்து நையப் புடைத்தனர் மேலும் மேலும்

கருவியிங் கிவனைப் போலீஸ் காவலில் வைபுமென்று
அருகுறாங் கிருடர் சாலை தனிலெனை யடைப்பித்தார்கள். 18

'நீதிவல் லோர்கள் மன்றில் விசாரணை நிகழ்ந்த பின்னர்
தீதுசெய் புன்மையேற்குச் சிறைபுகுந் தீர்ப்பு செய்தார்
ஆதலா லிங்க ணுற்றேன் ஐய! வென் சரித மீதாம்
காதலா லொருவர் சொத்தைக் கவறுதல் குற்ற மன்றோ?" 19

என்றுதன் பிழையு ணர்ந்த வதிலான் றன்னை நோக்கி
'நன்றுநின் குற்ற மிந்த நவையிலாப் புனித ரோடு
ஒன்றியே யிருத்த லொண்ணு தாகையா லுனை விடுத்தேன்
சென்று வாழ்ந் திடுதி' யென்று செப்பினு னரசர் கோமான். 20

விடுதலை பெற்ற வீரன் மீண்டுதன் னில்லிற் புக்கு
நடுநிலை சாந்தம் வாய்மை நன்மையு முடையோ னாகி
படிமிசை நெடுநாள் வாழ்ந்து பரன்றிரு வடியே சேர்ந்தான்
கெடுதலை யெண்ணங்கொண்டோர் சிறையிடைக் கிடந்தா ரன்றே. 21

ஆதலி னுண்மை பேச லனைவர்க்கு மேன்மை நல்கும்
பேதமை தவிர்க்கு மேலாம் பெருமையை யளிக்கும் பொல்லாச்
சாதலைத் தடுக்குஞ் சான்றோர் குழுவிடைச் சார வைக்கும்
தீதெலா மகற்று மீசன் றிருவடி சேர்க்கு மாதோ. 22

ஆகையா லுலகீர்! உண்மை பேசுமுன் வருவீ ராக!!
ஓகையால் வாய்மை தன்னை யுறுதியென் றுணர்வீ ராக!
தோகைமா மயிலின் வீரன் றுணை நமக் குரிய தாக!
வாகைவேற் குமரன் றாளைச் சந்ததம் வணங்கு கின்றேன். 23

சுபம்! சுபம்!! சுபம்!!!


# மகா நாட்டு மலர்

நமதுமுதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள், தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள்
40-க்கு மேல்பொலிந்து விளங்குகின்றன.

வழுவழுப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும்
இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணா 8 தபாற் செலவு அணா 3

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ்,
சென்னை




## சமயப் பகுதி

### இந்து தெய்வ தத்துவார்த்த விளக்கம்

(தேவி மூர்த்தம்)

திருவாளர் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்

(மித்திரன் தொகுதி 4, 351-ம் பக்கத் தொடர்ச்சி)

புண்ணிய பூமியாகிய இப் பாரதகண்டத்திலே விளங்கும் ஒவ்வொரு சிவாலயத்திலும், இதற்கென வமைக்கப்பட்ட ஆலய மொன்றில் மேற்கூறிய தேவி அல்லது சத்தி மூர்த்தம் (உமை யம்மையார் அல்லது பார்வதி மூர்த்தம்) காணப்படுகின்றது. இதனை அம்மன் கோயில் என்றும் அதில் எழுந்தருளியிருக்கும் லோகமாதாவாகிய தேவியை அம்மன் என்றும் சைவர்கள் வழங்குவர். சத்தியும் சிவமும் ஒன்றே. சிவன் வேறு, சத்தி வேறல்ல. அங்ஙனங் கொள்ளுதல் மடமையின் கூற்றே. "சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர, முத்தியான முதல்" என்று ஆன்றோர்கள் சத்தியையுஞ் சிவத்தையு மொன்றுபடுத்திக் கூறுவர். அநாதிமல முத்த சித்துருவாய் விளங்கும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய பெருமான் புறப்பொருளை நோக்காது யாதொன்றினுந் தோய்வில்லாமல் தாமே சுயம்பிரகாசமாய், அறிவு மாத்திரையாய் விளங்கியிருக்கும் போது, "சிவம்" எனவும்; (இது சிவாலயத்தில் மூலட்டானத்தில் இலிங்கத் திருமேனியாய் விளங்குவது); புறப்பொருளை நோக்கி "உலகெலாமாகி வேறாய் உடனுமாய்" ஆன்மாக்களிடத்து இயைந்து நிற்குந் தன்மையிற் "சத்தி" எனவும், (இது சிவாலயத்திலுள்ள அம்மன் கோயில் மூலட்டானத்தில் காணப்பெறும் அம்பிகையின் திருமூர்த்தம்) அபிதானப்படுவர். அவ்யக்த நிலையில் ஒன்றுபட்டுப் பிரிவின்றி யடங்கிக் கிடக்கும்பொழுது, கடவுளாகிய பெருமானுக்குச் "சிவம்" எனவும்; பிரபஞ்ச சிருட்டி நிமித்தம் வியக்த நிலையை யடைந்தும் கடவுள் பிரிவு தன்னிலே யுண்டுபண்ணிக் கொள்ளுகிறார். அந்நிலையில் பெருமானுக்குச் "சத்தி" எனவும் பேர் கூறப்படுகின்றது. அவ்யக்த நிலையில் பிரிவின்றி அடங்கி ஒன்றுபட்டுக் கிடந்தவைகள் வியக்த நிலையில் பிரிந்து காணப்படுகின்றன. சிவன், சத்தி, என்ற இரண்டு மூலப்பொருள்களின் விகாசத்தால்தான் உலக சிருட்டி நடைபெறுகின்றது. இவ்விரண்டும் அடங்கிய முழுமுதற் பொருளே கடவுள். உலகம் நடைபெறுவதற்காகக் கடவுள் தன்னைச் சிவசத்தி வடிவமாக இரட்டையாகப் பண்ணிக்கொண்டு அருள் செய்கிறார். ஆகையால் சிவன் சத்தி என்னு மிரண்டும் ஒன்றே. சிருஷ்டி, திதி, சம்மார, திரோபவ, அநுக்கிரஹாதி பஞ்சகிருத்தியத்தோடு கூடிய இவ்வுலக வியக்கத்துக்கு இவ்விரண்டும் இன்றியமையாதவைகளே. இரண்டில் ஒன்றில்லையாயினும் உலகம் இல்லை. இவைகளில் உயர்வு தாழ்வு கற்பித்தல் அறிவீனமாகும். இவ்வுண்மையை நமக்கு விளக்கவே கோயில்களில் சுவாமிக்கும் அம்மனுக்கும் சமமாகப் பூஜைகள் நடத்துவதும், சில விடங்களில் அர்த்தநாரீச்சுர மூர்த்தமாகக் கடவுளை வைத்து வணங்குவதும், நமது முன்னோர்களால் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. "சிவன் சத்தியோ டுற்ற் செகம் விரிந்திடும்" என்னும் ஆன்றோர் வாக்கு இங்கு நோக்கத்தக்கது. சிவமும் சத்தியும் சேர்ந்து உலகத்தை நடத்துவது போல எய்தற்கரிய மானிடப் பிறவியை யெடுத்த நாம் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து இல்லற தர்மமென்னும் நமது கடமைகளை உலக விருத்தியின் பொருட்டுக் கைக்கொண்டு செம்மையாய் நடத்த வேண்டு மென்பதை நமக்குத் தெரிவிப்பதற்காகவே, கோயில்களில் சுவாமிகளுக்குத் திருக்கல்யாண உற்சவங்கள் செய்யும் வழக்கம் ஏற்பட்டதேயல்லாமல், கடவுள் நம்மைப்போல் சுத்தாசுத்த பலவித அவாக்களால் தூண்டப்பட்டு, விவாக இச்சையை அடக்க வியலாது பெண்ணை மணந்தனரென்னுங் கொள்கையை வெளிப்படுத்துவதற்கல்ல. உலக சிருட்டிக்கு ஆணும் பெண்ணும் இன்றியமையாதவைக ளென்பதையும், அவ் விரண்டுஞ் சமமென்பதையும், அவைகளுக்குச் சமத்வ வுரிமையுண்டென்பதையும், புலப்படுத்தவே கோயில்களில் அம்மனுக்கும் சுவாமிக்கும் சமமாகவே பூஜை விழாவாதிய சிறப்புகள் நடத்தப்படுகின்றன. அழு தடியடைந்த அன்பராகிய மணிவாசகப் பெருந்தகையாரும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய பெருமானை நோக்கி "அம்மையே! அப்பா!!" என்று அழைக்கின்றார். திருநாவுக்கரசு சுவாமிகளும் "அப்பனீ! அம்மைநீ!!" என்று பெருமான் அம்மையோ டப்பனு யமர்ந்து இப் பிரபஞ்ச வுற்பத்திக்கு மூலகாரணரா யிருப்பதை புணர்த்துகின்றார். ஆதலால் சிவமுஞ் சத்தியு மொன்றே. பரப்பிரம்மமாகிய சுத்த சிவத்தின் அருளே, (பிரபஞ்ச சிருட்டிக் கேதுவாகிய எண்ணமே, வல்லமையே,

அல்லது அறிவாகிய ஞானமே) சத்தி யெனப்படும் இதனை

"சத்திதன் வடிவே தென்னிற்
றடையிலா ஞான மாகும்
உய்த்திடு மிச்சை செய்தி
யிவைஞானத் துளவோ வென்னில்
எத்திற ஞான முள்ள
தத்திற மிச்சை செய்தி
வைத்திடு மறைப்பின் ஞானன்
மருவிடுங் கிரியை யெல்லாம்."

என்று கூறும் சிவஞான சித்தியார்ச் செய்யுளானுணர்க. இதின் பாவனையைக் குறித்துச் செய்யப்பட்டிருக்கும் மூர்த்தமே சிவாலயங்களில் "பராசத்தி" என்று வழங்கப்படுகிறது. தீயிற் சூடுபோலவும், நீரிற் தட்பம்போலவும், மலரில் மணம்போலவும், மணியி லோசைபோலவும், சிவபெருமானைப் பிரியாது அபின்னையாயிருக்கும் அமலையாகிய இத்தேவியே சகல புவனாதாரங்களுக்குங் காரணபூதையென்றும், அவளே இறைவன் செயலையும் இயக்குகிறாளென்றும், அவளது திருவடியே அழிவி லின்ப முத்தியாகிய; கற்கநிலைய பளிக்க வல்லதென்றும், வேதாகம புராணாதி இதிகாசங்கள் முழக்கமிடுகின்றன. இதனை

"சத்துவைத் தலத்து மேலோன்
ளினனே முதலா யுள்ள
எத்தகைத் தேவ ராலு
மின்னதென் றுணர்தற் கெட்டா
சுத்தமெய்ச் சிவத்தி னோடு
தொல்லறம் வளர்க்கும் நந்தஞ்
சத்திதன் சேர்க்கை யாலிச்
சகமெலா முதிக்கு மன்றே"

என்னும் ஆன்றோர் அமுத மொழியால் நன்குய்த்துணர்க. இதல்லாமல்

"இத்தரை யண்ட சராசர மியாவையுஞ்
சத்தி யளித்தாளென் றுந்தீபற
சங்கரன் புணர்ப்பாலென் றுந்தீபற"

என்று பெரியோர்கள் கூறுகின்றனர். ஆதலால் சத்தியே பிரபஞ்ச வுற்பத்திக்கேதுவாகிய காரணபூதை யென்பது பெறப்படுகின்றது. மேற்கூறிய அருட்சத்தி வடிவமாகிய தேவி சிவத்தை மருவி, பெண்ணு மாணுமா யிருத்தலினாலேயே, சித்துப் பொருள்க ளெல்லாம் குணகுணிகளாகவும் (குணத்தை புடையது குணி யெனப்படும்) இருக்கின்றன. கடவுள் உயிர்களுக்குத் தாயுந் தந்தையுமாகுந் திருமேனி கொள்ளாவிடின், அவருக்குப் படைப்பு முதலிய தொழில்களிரா. அவர் ஆன்மாக்களுக்கு அனுக்கிரஹித்தலு மிராது. அருள் வடிவாய்ச் சத்தியின் வழிபாட்டானே சிவத்தை யடைதல் கூடும். "அவனருளாலே யவன்றாள் வணங்கி" எனவும் "அவனருளே கண்ணாகக் காணினல்லால்" எனவும் பெரியோர் சத்தியையே விசேடித்துக் கூறுவர். முற்றத் துறந்த முனிவராகிய பட்டினத்தடிகளும், "மெய்யாளாக் தாயுடன் சென்று பின் தாளைக்கூடி" என்னும் பாசுரத்தில் தேவியின் பெருமையைக் கூறி அவளருளால் சிவத்தை யடையும் மார்க்கத்தையும் கூறுகின்றார். எனவே முத்தி யடைதற்குச் சத்தி வழிபாடே சாலச் சிறந்ததென்பது புலனாகின்றது. ஆதலால் பூர்வ புண்ணிய மேலீட்டால் எச்சமயத்திலும் மெய்ச்சமயமாகிய சைவ சமயத்திலே வந்து ஜெனிக்கும் பாக்கியம் பெற்றவர்களாகிய நமது சைவ சமயிகள் யாவரும் சத்திவழிபாடாகிய தேவி வணக்கம் செய்தல் வேண்டும். அவளது வழிபாட்டாலே ஞானமும் முத்தியும் கிடைக்கும். ஜகன்மாதாவாகிய இம்மாகேசுவரியை "பிரகா சொரூபி" என்றும் "ஞானரூபி" என்றும் அறிஞர்கள் கூறுவார்கள். ஆனந்த மயமாக விளங்கும் அப்பராசத்தியார் [illegible] சதுர்ப்புஜம் இவற்றோடு விளங்குவர். [illegible] இச்சையாய் வடிவெடுத்த [illegible] அவ் விறைவியின் விராட் சொரூபமானது, [illegible] சிரசாகவும், ஆகாயமே கொப்பூழாகவும், [illegible] கண்களாகவும், [illegible] திசைகளும் செவிகளாகவும், பாதாளமே [illegible] யாகவும், நக்ஷத்திரங்களே [illegible] முத்துமாலைகளாகவும், ஆகாசவாணியாகிய [illegible] தோள்களாகவும், சமுத்திரமே ஆடையாகவும், சப்த மேகங்கள் கூந்தலாகவும், வாயுவே [illegible] சாமரமாகவும், ஏனையவை பிற உறுப்புக்களாகவும் [illegible] மையும். இத்தகைய மகத்[illegible] திவ்ய [illegible] மேனி கொண்டு விளங்கும், இவ்வுலகிலுள்ள [illegible] சர்வப் பிரபஞ்சமும் [illegible] பிரமதேவ [illegible] [illegible] முடி [illegible] [illegible], சதுர்த்[illegible] [illegible] தேவியா [illegible] [illegible] அத்தேவியார் [illegible] காரணமாகவும், [illegible] [illegible]. அவைகளை [illegible] கூற இப்பத்திரிகை இடந்தராது. [illegible] யவ்வம்மையார் [illegible] [illegible] மகிஷாசுரனைக் [illegible] உலக சிருஷ்டி தனக்குத் தானே [illegible] பிரம தேவர் [illegible] பூர்த்தி செய்விக்க, [illegible] வேண்டுகோட்கிணங்கி [illegible] இறைவனை மணந்த திருமூர்த்தம் "[illegible]" மூர்த்தம் எனப்படும். [illegible] கிணங்கிப் பர்வதராஜ குமாரியாகி [illegible] கொள்ள, [illegible] பின்னர் பரமனை [illegible] மணந்து [illegible] மூர்த்தம் "பார்வதி மூர்த்தம்" எனப்படும். விச்சாவதி யென்னும் பெண்மணியின் தவத்துக் கிரங்கி யனுக்கிரஹஞ் செய்து அவளுக்கு வாக்குறுதி செய்த வண்ணம், அவ்விச்சாவதி காஞ்சனைமாலையாய்ப் பிறந்து மலையத்துவஜ பாண்டியனை மணந்து வாழுநாளில், அன்னான் புத்திரப்பேற்றை வேண்டி யாகஞ்செய்ய, அதில் மும்முலைப் பிராட்டியாய்த் தோன்றி, தடாதகையெனும் பெயரோடு இளவரசாய் முடிபுனைந்து விளங்கி மிளிருநாளில் மன்னவன் விண்ணுல கெய்தத் தானே அப்பாண்டி நாட்டின் இராஜ்ஜிய பாரந் தாங்கித் திக்குவிஜயம் செய்து, சகல தேவரையும் போரிற் புறங்கண்டு, திறைகொண்டு, சிவபெருமானை மணந்து, கன்னி நாட்டாக்ஷியைக் கறைகண்டராங் கணவன்பால் நல்கி, உக்கிரகுமார பாண்டியனை புதவிய மூர்த்தம், தடாதகைப் பிராட்டியார் அல்லது மீனாக்ஷியம்மையார் திருமூர்த்தம் எனப்படும். இன்னும் கணபால சிருட்டி மூர்த்தம், மகிடாசுர சங்கார மூர்த்தம், பிரமானுக்கிரஹ மூர்த்த முதலிய பல திருமூர்த்தங்கள் இருக்கின்றன. இவைகளின் விரிவை "தேவி பராக்கிரமம்" என்னும் நூலிற் கண்டுணர்க. தேவியின் பெருமையோ அளவு கடந்தது. அதனைக் கூறுதல் ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனாலும் முடியாது. ஆதலால் செங்குந்த குலச் சிரியர்களே! சைவ சமயாபிமானிகளே! மேற்கூறிய தேவி மூர்த்தத்தை நியமப்படி வணங்கித் துதித்து வழிபாடாற்றி இம்மை யம்மை நலன்களைப்பெற் றுய்வீர்களாக! இதற்கு நங் குகக் கடவுள் திருவருள் துணைபுரிவதாக. சுபம்! சுபம்!! சுபம்!!!

[180-வது பக்கத் தொடர்ச்சி]

---



## சீர்திருத்தப் பகுதி

### நம்மவர் கைத்தொழில், வியாபாரம் ஆகிய இரண்டின் தற்கால நிலைமையும், அவற்றைச் சீர்திருத்தும் முறைமையும்

விருத்தாம்பாள் எழுதியது

நம் குலத்தவர் உயர்நிலை அடைவதற்குக் கைத்தொழிலையும், வியாபாரங்களையும் நாடோறும் இடைவிடாது செய்தல் வேண்டும். ஆகவே, அவ்விரண்டையும் பற்றி ஆராய்வோம்.

கைத்தொழிலாவது நமது நெசவுத் தொழில். இந்நெசவுத் தொழிலை நம்மவர் கைக்கொண்டு நாடோறும் முயற்சி செய்துகொண்டு வரல் வேண்டும். முற்காலத்தில் மிகவும் முற்போக்கு அடைந்திருந்த கிரீஸ், ரோம், எகிப்து முதலிய அயல்நாடுகளுக்கும், நம் தாய்நாடாகிய இந்தியா இந்நெசவுத் தொழிலால் கோசிகம், துசி, காழகம், சிரை, கூரை என்ற தொடக்கத்துப் பல்வேறு புடவைகள், செய்தனுப்பி புதவியும், தான் பயன்படுத்தியும் வந்தது என்பது பலரும் அறிந்ததாகும். அக்காரணம் பற்றியே நம் தாய்நாடாகிய தென்னிந்தியா என்று வழங்கப்படும் தமிழ் நாட்டிற்கு, காருக நாடு என்றும், அதனுள் ஒரு சிறு பிரிவுக்குக் கூறை நாடு என்றும் பெயர் கிடைத்தது.

மக்கள் நன்றாக ஒலிக்காமையால் காருக நாடென்பது கார் நாடகமென்றும், கூறை நாடென்பது கொறநாடென்றும் வழங்கலாயின. காருக நாடு என்ற சொல் தன் ஒலியை இழந்ததே யன்றித் தன் பொருளையும் இழந்து இப்பொழுது ஒரு சிறு பிரிவையே தனக்கு ஒரு இடமாகக் கொண்டிருக்கிறது.

தலைவர் திருவாளர் C. கனகசபைச் செட்டியார் அவர்கள் கூறை நாட்டு நமது மரபினரும், நெசவுத் தொழிலாளரும், வணிகருமாவார்க ளென்று கூறி யிருக்கின்றார்கள்.

இத்தகைய நமது தொழில் நிலைமை யில்லாதது; மிகுந்த வருத்தத்தோடு கூடிய முயற்சி யில்லாதது. உலகத்தார் எல்லாருள்ளத்தும் உலகத்து எவ்விடத்தும், உலவுகின்ற திருக்குறள் ஆசிரியர் திருவள்ளுவர், "செய்யுந் தொழிலை யெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கின் நெய்யுந் தொழிற்கு நிகரில்லை" என்று கூறியிருக்கின்றார். ஆகையால் நமது நெசவுத் தொழிலை உலகப் புதுப்போக்குக்குத் தக்கபடி கதராவும், சட்டைத் துணியாகவும், சேலையாகவும், துண்டாகவும் மற்றும் பல்வேறு நிறனுகப் புதிது புதிதாகப் புதுப்பிக்க வேண்டும். ஒரு ஊரிலுள்ள பெருங் கூட்டத்தார் ஒரே விதமாக நெய்வதால் விலையாகாமையும் கூலிக் குறைவும் ஏற்படுகின்றன. நமது இனத்தார்களுக்காகவும், நமது தொழிலாளர்களுக்காகவும், நமது நாட்டார்களுக்காகவும் நமது நாட்டுத் துணிகளையே நாம் உடுக்கவேண்டும்.

அன்றியும் நமது இனத்தவர் துணியும் புடவையும், பெரும்பாலும் பாபநாசமில், மதுரைமில், முதலிய மில் நூல்களால் செய்யப்பட்டவையாயினும், அம்மில்களில் நூற்கப்படும் பஞ்சும், நூற்கின்ற தொழிலாளர்களும், அம்மில்களின் பங்காளிகளும், நம்முடையதும் நம் நாட்டவரும் ஆகையாலும், அந்நூலால் நெய்கின்ற நாமும், இந்திய

நாட்டார்களே யாகையாலும், நாம் நெய்யுந் துணிகள் முதலியவற்றைக் காங்கிரசு சபைகளும், நமது நாட்டார்களும் கதரைப் போல் போற்றி உதவி செய்யவேண்டுமென்று நமக்குள் ஒரு கமிட்டியை ஏற்படுத்தி, காங்கிரசு சபைக்கும், நாட்டுக்குந் தெரிவிப்பதோடு, பலரும் பல இடங்களில் விரிவுரையும் செய்யவேண்டும்.

வியாபாரம்: நெசவு செய்வோர் தங்கள் துணி விற்காத காலத்தில் மிகுந்த வருத்த மடைகின்றனர். இயற்கையிலே வேலைக்குத் தக்க கூலியில்லாதவர்கள் ஆகையால் அவர்கள் நூலின் கொள் விலைக்கே நெய்த துணிகளை விற்கிறார்கள். துணி விற்காத காலங்களில், வியாபாரிகள் நூல் கொடுத்து உதவியோ, விற்கின்ற இடங்களுக்குச் சென்று விற்றுதவியோ உதவினால் பெரிய செய்நன்றியாகும்.

வியாபாரிகள் பல இடங்களிலுள்ள பல வியாபாரிகளுக்குச் சரக்குகள் அனுப்புகின்றவர்கள் ஆகையாலும் பல இடங்களுக்கும் சென்று அவ்வவ்விடங்களில் உள்ளவர்கள் உடுத்தும் உடைகளை நேரே பார்க்கக் கூடியவர்களாகையாலும், அவ்வவ் வியாபாரிகளுக்குத் தகுதியாகவும், அவ்வந் நாட்டார்களுக்குத் தகுதியாகவும், பலவிதமாக நெய்யும்படி செய்து விற்பனை செய்வார்களானால் தங்களுக்கும் குடிகளுக்கும் ஊதியம் கிடைக்கும். நெய்யுந் தொழில் செய்யும் நாம் விற்காத காலத்திற்கு உதவும்படியாகத் தற்காலத்திற்குத் தக்க கூட்டுறவு நாணயச் சங்கங்கள், கூட்டுறவு வியாபாரச் சங்கங்கள் முதலியன ஏற்படுத்திக் கொள்வது நன்றான வழியாகும். அதன் வழியாக வாணிபமும் நடத்திக் கொள்ளலாம்.

சீர்திருத்தம்: நமது தாய் நாடாகிய இந்திய நாட்டில் பொதுவாகவே கல்விப் பெருக்கம் இல்லையென்பதும், கைத் தொழில் செய்கின்ற கூட்டத்தாரிடத்தில், கல்வி மிகவும் குறையென்பதும், அதற்குக் காரணம், சிறுவர் படிக்கக்கூடிய இளமையில் அவர்களுக்குக் கைத்தொழில் கற்பிப்பதென்பதும், அவ்வாறு கைத்தொழில் கற்பிப்பதற்குக் காரணம் தங்கள் வறுமை என்பதும் உலகம் அறிந்தவைதான். ஆகையால் நாமும் கல்வியில் முன்னேற்றமடைய ஒவ்வொருவரும்—ஒவ்வொரு சிறுவர் சிறுமியும்—கட்டாயம் கல்வி கற்கும்படி செய்யவேண்டும்.

கல்வியினாலேயே, உலகப் புதுப்போக்கு, கைத்தொழில், திருத்தம், வணிகமுறை முதலியன முற்போக்கு அடையுமென்று முன்னால் சொன்னதைத் தங்களுக்கு ஞாபகப் படுத்துகின்றேன். நமது கூட்டத்தாருள், செல்வர்கள் மிகுதியாகக் கல்வி கற்காமல் வியாபார முதலிய துறைகளில் இறங்கி விடுகிறார்கள். அல்லாதவர்கள் வறுமையால் கைத்தொழிலில் இறங்கிவிடுகிறார்கள். ஆகையால் இருதிறத்தாரிடத்தும் கல்வி மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. செல்வர்கள் கட்டாயம் கல்வி பயிலுவதுடன் அதனை யவாவும் ஏழைப் பிள்ளைகட்கும் இயன்ற உதவி புரிதல்வேண்டும்.

கல்வி போலவே கைத்தொழிலும், வணிகமும் பல இடங்களில் முன்னுக்கு வரவில்லை. செல்வர்களும் பொது ஊரார்களும், கைத்தொழிலில் நுட்பமான அறிவுடையவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பொருளுதவி செய்து, அன்னிய நாட்டுக்கும், அன்னிய தேசங்களுக்கும் அனுப்பிப் படித்து வரும்படி செய்து, அவர்களைக் கொண்டு உலகப் புதுப்போக்குக்குத் தக்கவாறு திருத்திக் கொள்ள முயற்சிக்கவேண்டும்.

கீற்க, நம்முடைய இளைஞர்களுக்குள் ஒரு கமிட்டியை ஏற்படுத்தி, நம்மாபினர் இருக்கும் இடங்களுக்கு ஆண்டுக்கொரு முறையாவது சுற்றி வரவும், அங்கங்குள்ள நன்மைகளையும் சீர்திருத்த முறைகளையும் அறிந்து புகுத்தவும், தீமைகளை அறிந்து நீக்கவும் ஏற்பாடு செய்வதோடு, அந்தக் கமிட்டியிலிருந்து செய்த வேலையை ஒவ்வொரு மகாநாட்டிலும் அறிவிக்கும்படி செய்யவும், கமிட்டியின் வேலையாக நாம் ஏற்படுத்த வேண்டும்.

---

## விளம்பரம்

### திருச்செங்கோடு பெஞ்சு கோர்ட்டுத் தலைவர்

இதுவரை உத்தியோகப்பற்றுடைய சப்மாஜிஸ்ட்ரேட் அவர்களே வகித்துவந்த இந்த ஸ்தானத்தில் செங்குந்த திலகரும், பிரபல வியாபாரியும் நமது முதல் மகாநாட்டுப் பொதுக் காரியதரிசியுமான திரு. V. V. V. C. நடேச முதலியார் அவர்கள் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டுள்ளனரெனக் கேட்டுப் பெருமகிழ்வெய்துகிறோம். நம் குலத்தினரில் வேறு பலரும் இத்தகைய பொது ஸ்தானங்களை வகித்துக் காரியங்களைச் செவ்வனே நடத்திக் கௌரவம் பெற முன்வரவேண்டுமென இறைவனை இறைஞ்சுகிறோம். திரு. முதலியாரவர்களது நியமனம் திருச்செங்கோட்டு வாசிகளுக்கெல்லாம் உற்சாகத்தை ஊட்டியதாகத் தெரிகிறது. [ப - ர்.]






# கொடியேற்று விழாக் கும்மி

ச. நா. குமரகுரு முதலியார், சைவ சித்தாந்த தமிழ்ப் புலவர், மணவை

1. கும்மியடி பெண்கள்! கும்மியடி! கரங்
கூப்பிக் கும்மி யடியுங்கடி!
நம்மவர் வெற்றியும் நன்மையைப் போற்றிந்த
நாட்டினில் மேவி நலம் பெறவே.

2. சீர்மிகுந் தென்னிந்திய செங்குந்தச் செல்வ
தேசம் புகழ்க்'காஞ்சி' யம் பதியின் [ரித்
ஏர்மிகு நற் "கொடி யேற்று விழாக்கும்மி"
இயம்பக் கயம்பொன் றூட்டுணையே.

3. பூவுலகோ ரெத்துணைச் செயலுஞ் செயப்
புகுமுன் வெற்றிக் கொடிபுதுக்கி
மேவு மோர் மங்களந் தான்பெறு மாறென
வெற்றிக் கொடியை விளம்புங்கடி!

4. அம்பிகை யீந்த குந்தம் நடுவோம்; அச
ரேசன் அணி துவசம் இடமாம்
தம்புகழ்ச் சேவற் கொடி வலமாம் இதைச்
சார்ந்த புகழ்ச் சில சாற்றிடு வோம்!

5. செங்குந்த மக்கள்பல் சீருற வேண்டி இத்
தேசநம் சோதரர் சேர்வதற்கும்
எங்குந் தங்கைப் பொருள் இன்று செலவிட
இன் பெயர் சற்றே இயம் புங்கடி!

6. தாவுங் கச்சி சாமிநாத முதலியார்
தங்கவேல் முதலி தம் அன்பினால்
மேவுஞ் 'சபாபதி' வள்ளல் தலைவராம்
மீனாட்சி சுந்தரர் மேற்படியே.

7. மங்கள மிகுந்த மாநாடு திறந்து
வைத்தவர் மூத்தைய மாமுதலி
எங்கும் புகழ்பீம ராஜ முதலியார்
இன்புகழ் பாடி யடியுங்கடி.

8. மன்னுங் கொடியேற்ற வந்தவராங் கோவை;
மாநகர் செங்கோட்டை யாமுதலி
சென்னையின் சண்முக சுந்தர முதலி
செங்குந்த மித்திர னாசிரியர்.

9. இப்பெயர் பெற்ற பெரியார் முதலாப்பல்
எண்ணரிய நம் இனத்தவரும்
செப்புங் "காஞ்சி" ஸ்டேஷன் வந்து குழும [முன்
சொன்னோர் வரவேற்பு செய்தனரே.

10. தாம்பூலஞ் சந்தனந் தான் கொடுத்து உப
சாரஞ் சொல்லி மலர் மாலை யிட்டு
ஆம்புகழ்க்கூறி ஜே! ஜே! ஜே!!! ஜெயவென்
றனைவோர்க்குஞ் ஜே! என்(று) அரைந் [தனரே.

11. மன்னவர்க்கு நால்வகைச் சேனை என்பரிம்
மாநிலச் செங்குந்தர்க் கவ்வகையே
முன்னிவர் யானைபரி மோட்டார் சேனை
முரசுபல் வாத்திய முழங்கிற்றடி!

12. காரின் மிசை "சபை நாயகர்" மற்றுள
காவலர் தங்களை நன்குயர்த்தி
ஊரின்வலம் வருங் காட்சியைக் கண்டோர்
உரைப்பதற் கொல்லுமோ உண்டொடி யீர்!

13. அண்டர் மகிழ்கின்ற சாருண்டாயினம்
ஆறுமுகவ னமைச்சர் வெல்வார்
கண்டினி யச்சம் நமக்கில்லை யென்று
கழன்றிடத் தக்க(து) இக்காட்சியதே!

14. கச்சபேச ராலயத் தீசானத்துநற்
கம்பத்தடியின் முன் வந்திறங்கி
இச்சகத்தோர் மெச்சச் சுற்றித்தவிசின்
இனிதிருந்(த) ஆர்வம் இயம்பரிதே?

15. முன்னா டெழுபத்தி ரண்டினுக்குத் தலை
முத்தி யளிக்குங் கச்சிப்பதியே,
பொன்னுடெனும்படி செங்குந்தச் செல்வர்
பூரித்தமர்ந்தனர் பாருங்கடி! [கன்

16. சைவ சித்தாந்த தமிழ்ப்புலவர் முதல்
சாற்றரும் பாவலர் செங்குந்தரைத்
தெய்வமென்றே சொல்லிச் செப்பிய பாடலி
சேதியைக் கேட்டுத் தினம் மகிழ்வீர்! [ன்

17. ஈரோட்டினிற் கொடி யேற்றினதின் பதில்
எற்றனர் என்று இயம்பிடவே
பாராட்டிப் புகழ் செங்கோட்டையா கொடி
பறக்க வேற்றி நற்பண்பளித்தார்.

18. வானளாவிக் கொடி யாடுதடி ! குந்த ;
மன்ன ! ஜெய! வென்று பாடுதடி !
தேனளாவுஞ் சடையான் நுதல் வந்தவன்
சேனை யிவரென்று செப்புதடி !

19. நற்பிரஜோற்பத்தி யாண்(டு) இடபமதி
நான் ஒரு மூன்றில் சனி வாரம் ;
முற்பகல் கடக லக்கினத்தில் கொடி
முன்னவர் போல உயர்த்தினரே.

20. மங்களம் தங்கிய செங்குந்தச் செல்வர்கள்
மாகா(டு) இரண்டாவ(து) இப்பதியில்
இங்கிதமாய்க் கூட்டுவித்தோர் வந்தோர்கள்
[மற்
றன்னார்க்(கு) அறுமுகன் இன்றுணையே ;

சுபம் ! சுபம் !! சுபம் !!!

---

# இளம் விதவைகள்

("சுதந்திரச் சங்"கிற் கண்டது)

சென்ற மாசி மாதத்தில் சென்னையில் ஒரு விவாகம் நடந்தது. விவாகத்திற்குப் பின் மணமகனுக்குக் கல்கத்தாவில் ஓர் உத்யோகம் கிடைத்தது. அங்கு உத்யோகமேற்று ஒரு மாத மாவதற்குள் சீதோஷ்ண ஸ்திதி தேகத்திற்கு ஒத்துக் கொள்ளாததால் அவர் நோய் வாய்ப் பட்டார். தனக்கு அந்திய காலம் அணுகி விட்டதாக அவர் எண்ணினார். சென்னையிலிருந்த தமது மனைவிக்கு அப்போது அவர் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதம் பின்வருமாறு:—

" அன்பார்ந்த............க்கு,

போன மாதம் தான் நாமிருவரும் விவாகம் செய்துகொண்டோம். ஈசன் நம்மைப் பிரித்து விடுவான்போலிருக்கிறது. நான் என்ன செய்வேன் !......

......உனது அழகுக்கு ஆசைப்பட்டே நான் உன்னை மணந்தேன். நான் போன பின்பு அழகான உன்னைச் சமூகத்தினர் பாழ் செய்து விடுவார்களோ எனப் பயப்படுகின்றேன். உன் தகப்பனருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இதைப்பற்றி விரிவாக எழுதி யிருக்கின்றேன். உனது நீண்ட இருண்ட கூந்தலைக் களைந்து கொள்ளாதே! உனது அழகான முகம் பாழாவதை மனத்தால் எண்ணவும் சங்கடப்படுகிறேன்... ..

உயில் எழுதி வைக்க ஏற்பாடு செய்து வருகிறேன். சுமார் பதினாயிரம் ரூபாய் வரை உனக்குக் கிடைக்கும். அந்தப் பணத்தைக் கொண்டு நீ பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்க வேண்டுமென்பது எனது அபிப்பிராயம்.

இனிமேல் நான் எழுதும் விஷயங்களைக் கேட்டு நீ திடுக்கிடக்கூடும். நீ ஏதோ இரண்டு மூன்று வகுப்பு படித்தவளாதலால் கொஞ்சம் தைர்யத்தோடு இந்த வார்த்தையை எழுதுகின்றேன். ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு வாழ வேண்டுமென்றே உன்னை எனக்குக் கொடுத்தார்கள். உன்னுடைய சிறிய மனமும் அதை விரும்பி யிருக்கும். ஆனால் என் தலை விதி வேறு விதமாயிருக்கிறது. நான் சென்ற பின்பு, உனக்கு இஷ்டமிருந்தால் நீ வேறு விவாகம் பண்ணிக்கொள்ளலா மென நான் உத்திரவு கொடுக்கிறேன். நான் ஒன்றும் கட்டாயப் படுத்தவில்லை. உன் தகப்பனரும் உன்னை ஒரு வித கட்டாயத்துக்கும் உட்படுத்த - காது என அவருக்கு அறிவித்திருக்கிறேன். மனைவியிறந்தால் புருஷன் மட்டும் மறுவிவாகம் எவ்வளவு வேண்டுமானாலும் செய்துகொள்ள நமது சமூகம் அனுமதிக்கிறது. புருஷனிறந்தால் பெண்ணின் தலையைச் சிரைத்துப் போகிறார்கள்......இந்த அக்ரமம் வெகு நாளாக என் கண்களை உறுத்திற்று.

என்னை நினைத்து நினைத்து வெறுமனே அழாதே. ஆனால் என்னை எப்போதும் நினைவில் மட்டும் வைத்துக்கொள்.

இப்படிக்கு


உனது கணவன்

.....................”

இந்தத் தாராள நோக்கங்களைச் சொந்தப் புருஷனே எழுதி யிருக்கிறான். இந்தக் கடிதம் வந்தவுடன் அந்தப் பெண்ணும் அவள் தந்தையும் இன்னும் சில உறவினர்களும் கல்கத்தாவுக்குச் சென்றார்கள்.

இந்த அரிய வாலிபரை ஆண்டவன் அற்ப ஆயுளில் அழைத்துக்கொள்ள வில்லை. இப்போது அவர் குணமடைந்து அதே வேலையில் இருந்து வருகிறார். இந்தத் தம்பதிகளின் வருங்கால வாழ்க்கை எவ்வளவோ அன்பு ததும்பியதாக இருக்கு மென்பதில் ஐயமில்லை. இவர்களுக்கு நீண்ட ஆயுள் ஆண்டவன் அருளுக! இந்தச் செய்தியையும், கடிதத்தையும் அனுப்பி உதவிய பம்பாய் S. R. அய்யருக்கு எமது நன்றி உரித்தாகுக. விதவா விவாக சம்பந்தமாகப் போன மாதத்தில் மகாத்மா






# 'தேக சுகம்'

எல். மாரியப்பன் அவர்கள்

(97-ஆவது பக்கத் தொடர்ச்சி)

அடுத்தபடியாக ஆராய வேண்டுவது 'வேலை செய்யவேண்டும்' என்பது. ஆங்கில பாஷையில் 'துருப்பிடித்துப் போவதைக் காட்டிலும் தேய்ந்து போவதே மேல்' என்று பொருள்படும் முதுமொழி ஒன்று உண்டு. இருப்புச் சாமான்களை உபயோகிக்காமலே வைத்திருந்தால் சிறிது காலத்தில் துருவேறித் தானாய்விடும். சரிவர உபயோகித்து வந்தாலோ நெடுங்காலம் வேலைக்கு உதவி வரும். மனித தேஹமும் இவ்வாறே. சும்மா உட்கார்ந்து வேலையே செய்யாமலிருக்கிறவனைக் காட்டிலும், உடம்புக்கும் மூளைக்கும் நிரம்ப வேலை தருகிறவன் நெடுங்காலம் வாழ்ந்திருப்பான்.

ஆனால் மிதம் மிஞ்சித் தேஹாப்பியாசம் செய்வதும் உழைத்து வேலை செல்வதும் ஒன்றுமே செய்யாமலிருப்பதைக் காட்டிலும் இன்னும் கேடானது. உழைத்து வேலை செய்ய வேண்டி வருவது முன் செய்த பாவத்தின் பயன் என்பார் சிலர். அது தெரியாத் தன்மையாகும். வேலை செய்வது சரீரத்திற்கு லாபகரமானது.

வேலையே செய்யாமலிருக்கிறவனைப் பார்த்து எல்லாரும் 'ஐயோ, இவன் ஏன் எப்பொழுதும் சும்மா விருக்கிறான்!' என்று பரிதாபப் படுவார்கள். உழைத்து ஜீவிக்கக் கிடைக்க வேண்டுமே!

சரீர சுகத்திற்கு உழைப்பு எவ்வாறு அவசியமாகிறது?

(1) நாம் தேக சிரமப்பட்டு வேலை செய்யும்போது நாம் ஆழ்ந்து நீண்டு சுவாஸம் விடவேண்டிய அனுகூலம் ஏற்படுகிறது. அப்பொழுது சுவாஸாசயத்திற்குள் நல்ல காற்று அதிகமாகவும் அடிக்கடியும் சேர்கிறது. நல்ல காற்றில் பிராணவாயு அதிகமாக இருக்கிறதாகையால் அது இரத்தத்தை வேண்டிய அளவு சுத்தம் செய்து நமக்குச் சுகத்தையும் பலத்தையும் தருகிறது. இரத்தம் சுத்தமாக இருந்தால் நமக்குச் சவுக்கியம் அவசியமாக ஏற்படும்.

(2) உழைத்து வேலை செய்தால் வேர்வை அதிகமாக வெளிப்படுகிறது. வேர்வை வெளிப்படுவதால் இரத்தத்தில் உள்ள மஷ்டுக்கள் நிவர்த்தியாகி இரத்தம் இன்னும் சுத்தமாகிறது.

(3) உழைப்பு சரீரத்தின் எல்லா அவயவங்களுக்கும், உறுப்புக்களுக்கும் நன்மை செய்யும். மிதமிஞ்சின உழைப்பும் அப்பியாஸங்களும் தீயவை என்பது முன்பே சொல்லப்பட்டது. வேலை செய்வதால் ஹிருதயம் அதிகமாகவும், விரைவாகவும் விரிந்து சுருங்கிப் பலப்படுகின்றது. இதுபோலவே எல்லா அவயவங்களும் பலப்பட்டு அவைகளுடைய வேலைகளைச் சரிவரச் செய்கின்றன. மற்றும் தேஹாப்பியாசத்தால் பசி கூர்மையாகிறது. அயர்ந்த நித்திரை வருகிறது. மனஉற்சாகம் குறைகிறதில்லை, தேக சவுக்கியம் பூர்ணமாக ஏற்படுகிறது; மனது உற்சாகப்படுவதால் சரீரசுகம் விருத்தியாக

[184-வது பக்கத் தொடர்ச்சி]

காந்தி எழுதிய ஒரு கடிதத்தையும் அடியில் தருகிறோம் :

"பண்டித ப்ராணநாத பஜாஜுக்கு.
அன்பார்ந்த நண்ப!

உனது கடிதம் கிடைத்தது. இளைஞர்களெல்லாம் இனி விதவைகளை மணம் செய்துகொள்வதென்று தீர்மானிக்க வேண்டும். பண்டித குலத்தில் கிடைக்கா விட்டால் சத்யாக்ரஹ தர்மத்தை அனுஷ்டித்து வேறு ஜாதியினின்றும் பொறுக்கிக் கொள்ளலாம். தம்முடைய ஜாதியிலேயே மணம் புரிந்து கொள்ள வேண்டுமென இளைஞர் விரும்பினால் தங்களுடைய ஜாதிப் பெரியார்களோடு வாதிக்க வேண்டும். ஜாதி விதவைகளைக் கல்யாணம் செய்துகொள்ள அவர்கள் அனுமதிக்காவிடில் வேற்று ஜாதியில் கல்யாணம் செய்துகொள்வோமென எச்சரிக்கையும் செய்ய வேண்டும்.

எம். கே. காந்தி"

வும் ஏதுவாகி எல்லா விதங்களிலும் சந்தோஷமும் திருப்தியும் உண்டாகின்றன.

நாளெல்லாம் படுக்கையில் படுத்திருந்து உடம்பையே அசைக்காதவனுக்கு மேற்கண்ட அனுபவங்களே கிடைக்கா; கஷ்டங்களும், துக்கமும் அடிக்கடி சம்பவிக்கும். அவன் வீட்டினுள்ளேயே இருக்கிறதனால் சுத்தமான காற்று அவனுக்குச் சுவாசிக்க அகப்படுகிறதில்லை. இதன் முடிவு மலச்சிக்கல், தலை வலி, தீபனமின்மை, நித்திரைக் குறைவு முதலியவையாக ஏற்பட்டு மனிதன் சுகம் முழுதும் கெட்டுவிடுகிறது.

தேஹாப்பியாசம் இன்மையால் மேற்சொல்லியவாறு கஷ்டப்படுகிறவர்களில் ஒருவரான எனது நண்பரை யான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். அவர் எப்பொழுதும் வீட்டினுள்ளேயே இருப்பார். எனது மற்ற நண்பர்களும், நானும் அவரைச் சற்று வெளியில் உலாவ வருமாறு அழைப்போம். அவரும் அதிக கஷ்டத்துடனே எங்களுடன் சற்றுத் தூரம் வந்து விட்டுத் திரும்பிவிடுவார் வீட்டிற்கு. இவரது தேக சுகம் எவ்வாறு இருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அவர் எப்பொழுதும் சந்தோஷமாக இல்லாமல் மனது குன்றி, உற்சாகமே யில்லாமல் விசனத்திற்கு உள்படவேண்டியவராக இருக்கிறார்.

நமது தேசத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்கள், படிப்பில்லாத மற்றவர்களைப் போல் அவ்வளவு தேஹாப்பியாசம் செய்கிறதில்லை. இதற்குக் காரணம் என்னவோ விளங்கவில்லை. கூலி வேலை செய்கிறவன் தன் ஜீவனத்துக்காக உழைக்க வேண்டியதென்பது உண்மையே. ஆனால் படித்தவர்களும் தங்கள் சரீர சுகத்திற்காக ஏதாவது தேஹாப்பியாஸம் செய்ய வேண்டாமோ? அவசியம் செய்யத்தான் வேண்டும். 'ஆபீஸில் நாளெல்லாம் உட்கார்ந்து வேலை' செய்தேன்' என்பார்கள். அது வேலையாகாது. இதற்குத் தேஹாப்பியாஸங்களும், பந்து முதலிய ஆட்டங்களுமே தகுதியானவை.

நமக்கு வேண்டிய சரீர உழைப்பு ஏதாவது செய்யவேண்டும். மூடர்களே நாள் முழுதும் உட்கார்ந்து வம்பு பேசுவார்கள். ஆனால் நாமோ சுறுசுறுப்பாக இருந்து சுகம்பெற வேண்டும். மூளை வேலை முடிந்தபின் தேஹாப்பியாஸம் செய்ய வேண்டும். அப்போதுதான் உடம்பும், மூளையும் வலிவைப்பெறும். நமது தேசத்திலுள்ள அநேகர் தாங்கள் சிறுவயதில் பள்ளிக்குச்சென்று பயிலுங் காலத்தில் அங்கே யாதொரு ஆட்டத்தையும் பயிலாம விருந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு அது பெரிய நஷ்டம். உடம்பிலுள்ள முக்கியமான தசைகளைப் (muscles) பயிலுவதும், உறுப்புகள் குலுங்க உழைத்து ஊட்டுவதும் சரீரப் பயிற்சிக்குப் போதுமானவை. "தசைப் பயிற்சி"யைத் தனிமையில் செய்வதினாலே உற்ஸாகம் குறைவுபடுகிறதாகையால் அதற்கும் ஆட்டங்களுக்கும் உள்ள பிரயோஜனங்களில் பேதம் ஏற்படுகிறது. ஆட்டங்கள் ஆடும்போது புத்தியும், ஊக்கமும், ஆநந்தமும் எவ்வளவு உணர்கின்றார்கள்! மேற்சொல்லி வந்த விஷயங்களில் இருந்து சுகத்திற்காகவும், பலத்திற்காகவும் சரீரப்பயிற்சி மிக்க அவசியம் என்பது விளங்குகின்றதல்லவா?

அடுத்த விஷயம் 'தசைகளைப் பயிற்சி செய்ய வேண்டும்' என்பதாகும். தசைகள் மூளையின் ஆளுகைக்கு எவ்வளவு உட்பட்டிருக்கின்றனவென்பது யோசிக்க விந்தையாக இருக்கின்றது. தசைகளின் மேல் மனதையும் கவனத்தையும் செலுத்தாது நூறுதரம் தேஹாப்பியாசம் செய்வதைக் காட்டிலும், கவனித்துப் பத்துதரம் செய்வதே சிறந்தது. நமது சரீரத்தில் தசைகள் இருக்கும் இடங்கள் எவை என்று முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு தசையும் என்ன விதமான வேலைக்குத் தகுதியாக அமைக்கப்பட்டிருக்கிறதென்று அறிந்துகொண்டு, அதற்குத் தக்கபடி கஸரத்துக்களைப் பழக வேண்டும். தசைப் பயிற்சிக்காகச் செய்யும் மேற்குறித்த கஸரத்துக்கள் தசைகளை மாத்திரம் விருத்தி செய்வதுடன் நிற்பதில்லை. சரீரத்தின் உள்ளே மறைந்திருக்கும் உறுப்புக்களையெல்லாம் ஒவ்வொன்றும் தன் வேலையைக் குறைவில்லாமல் சுறுசுறுப்பாகச் செய்துவரும்படி தூண்டுகின்றன. கஸரத்து செய்யும்போது வேர்வை ஏராளமாக வெளிப்படுவதனால் இரத்தமும் சுத்தமாகின்றது; சுவாஸம் துரிதப்படுகிறதாகையால் நுரையீரலுக்கும், இருதயத்திற்கும் நன்மை. குனிந்து, நிமிர்கிறதினால் கல்லீரல், இரைப்பை, குடல் இவைகளுக்கு வலிவு. இவ்வாறாகக் கஸரத்துப் பழக்கம் சரீரத்திற்கும் மனதிற்கும் அபிவிருத்தி பயக்கின்றது.

தன் தசைகள் எல்லாவற்றையும் பயிற்சி செய்து தன் சரீரம் சுகமும், வலிவும், சுறுசுறுப்பும் கூடினதாக எப்பொழுதும் இருக்கும்படி செய்துகொள்ள விரும்புகிறவர்கள் சாப்பாட்டுக்கு உள்ளதுபோல் சரீரப்பயிற்சிக்கும் கால நிர்ணயம் ஏற்படுத்திக்கொண்டு வரிசையாக விடாமல் செய்து வர வேண்டும்.

ஆரம்பத்தில் ஒவ்வொரு கஸரத்தையும் சில தடவைகள் மாத்திரமே செய்து, பிறகு அதிகமாகச் செய்யவேண்டும். கஸரத்து செய்வதற்கு ஏற்ற காலம் எது? இதை நிச்சயிக்கிறதைக் காட்டிலும் ஏற்காத காலம் இன்னது என்று குறிப்பிடுவது சுலபமாகும். பசியும், சோர்வும் கூடி ஆயாஸமாக இருக்கிற வேளையிலும், சாப்பிட்ட உடனேயும் அப்பியாஸம் செய்யக் கூடாது. மற்ற வேளைகளில் எப்பொழுது சௌகரியமோ அப்போது செய்யலாம்.

"நானும் ஸாண்டோவைப் போலவும், ராமமூர்த்தியைப் போலவும் பருத்துக் கொழுக்க வேண்டுமோ? சரீரப்பயிற்சி செய்வதற்கும் எனக்கு அவகாசம் ஏது? வேறுவேலையில்லையா?" என்றுசொல்லித் தேஹாப்பியாஸம் செய்வதை அசட்டை செய்யக் கூடாது. ஆண் ஆனாலும் சரி, பெண் ஆனாலும்



சரி, வாலிபனாக விருந்தாலும் சரி, முதிர்ந்தவனானாலும் சரி, உன் அந்தஸ்து எப்படி யிருந்தாலும் சரி, பிரதிதினமும் சிறிது காலம் சரீராப்பியாசம் செய்து வருவதால் எவ்வளவோ நன்மையுண்டு.

அடுத்தபடியாகச் சரீர சவுக்கியத்தைப் பெற்று, சவுக்கிய நிலையிலேயே இருக்க விரும்புவோர்களுக்கு "மிதம்" என்ற மொழியே வழியாகும்.

மிதம் என்றால் மிதபோஜனம், மிதபானம் என்பது மாத்திரமல்ல, தூங்குவது, சரீரப்பயிற்சி செய்வது, வேலை செய்வது முதலிய மனிதன் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் மிதமாக இருக்கும் வாடிக்கையைக் குறிக்கும். ஆஹாரத்தில் மிதம் இல்லாவிட்டால் சரீர சவுக்கியம் கெடும். அதிகமாகச் சாப்பிட்ட சாப்பாடு ஜீரணமாகாது. ஜீரணமாகாத ஆஹாரம் இரத்தத்துடன் கலக்காது. ஆகையால் அஜீரணம் ஏற்படும். அஜீரணத்தின் காரணத்தினால் மலச்சிக்கலும், தலைவலியும் உண்டாகிப் பசி மந்திக்கும். ஊண் விஷயம் இவ்வாறு ஒரு புறமிருக்க, உழைப்பு விஷயமாகவும் சிலர் மிதம் மிஞ்சுவதுண்டு. சிலர் அளவுக்கு அதிகமாகச் சரீராப்பியாஸம் செய்வார்கள். சிலர் அளவுக்கு அதிகமாக இளைப்பாறுவார்கள். அதிக உழைப்பால் உடம்பைக் கெடுத்துக் கொள்பவர்களைப் போலவே, சோம்பலாக இருப்பவர்களும் வியாதிக் கிடமாவது சாதாரணம். மதுபான சம்பந்தமாக இன்னும் ஒரு விஷயம் உண்டு. நீங்கள் மதுபானமே செய்யாதவராக இருக்கும் பக்ஷத்தில், இனியும் ஒருக்காலும் குடிப்பதில்லை என்ற நிச்சயம் கொள்ளவேண்டும். அநேகர் வழக்கமாகக்'கள்' முதலிய மதுபானத்தைச் சாப்பிடும் வழக்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது சரியல்ல, குடிகாரர்களுக்கு ஏதாவது வியாதி வந்து விட்டால் சவுக்கியமாகிறது கடினம். அவர்கள் கல்லீரல் இறுகிக் கிடக்கும். இருதயம் மெலிந்திருக்கும். குடியே இல்லாதவர்களுக்கு மருந்து பிடிக்கிறது போலக், குடிப்பவர்களுக்கு மருந்து சுருக்கென்று பிடிக்காது. மதுபானம் செய்வதால் தேஹ சவுக்கியம் நாளடைவில் குறைவதுடன், க்ஷுரவமும் கட்டாயமாகக் குறைந்து போகும். குடிகாரன் மூளையற்ற மிருகத்திற்குச் சமானமாவான். குடிகாரன் அதிகச் செலவுக்கு உள்ளாகிக் கைப்பணம் கரைந்து கடனுக்கு இரையாவான் என்பது உண்மை. கள் ஆகாரவஸ்துவல்ல; அது ஜீரணமாகாது. இவ்வளவு கெடுதலுக்குக் குடிகாரனை உள்ளாக்குவது கள் முதலிய பானமாக இருக்க, அதைக் குடிக்க என் நாவூரல் கொள்ளவேண்டும்? புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றாகிய திருச்செங்கோட்டில் கள் முதலிய மதுபானக் கடைகள் இல்லாமல் அடியோடு ஒழிந்தது யார் செய்த புண்ணியமோ, யாம் அறியோம். தற்போது குடிகாரர்களே அவ்விடத்தில் இல்லை என்பது என்னுடைய நம்பிக்கை. அப்படியின்றி ஒன்று, இரண்டு பேர் ஐந்து மைல் தூரத்திலுள்ள கடைகளுக்குச் சென்று குடிப்பவர்களாக இருந்தாலும், அவர்களும் கூடிய சீக்கிரம் நல்வழிப்படுமாறு ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் கிருபை செய்வார் என்ற நோக்கத்துடன் இவ்விஷயத்தில் அதிகமாகப் பிரவேசிக்க மனமில்லாமல் எழுதத் துணிகின்றேன்.

புகையிலை விஷயமாகவும் இதே காரணங்கள் தகுதியாகும். புகையிலையில் ஆசை ஒருவருக்கும் உடன் பிறந்ததில்லை. அதில் ஆசை கொண்டால் செலவு அதிகமாவதும் தவிர, உடம்பும் கெட்டுவிடும் என்பது தெரிந்த விஷயமாகும். முக்கியமாகச் சிறுவர்களுக்குப் புகையிலை மஹாக் கொடியது.

மேற் சொல்லி வந்த விஷயங்களில் இருந்து நாம் தேக சுகத்தை எவ்வாறு காப்பாற்ற முடியும் என்பது தெள்ளெனத் தெரியும். அதாவது சிறுவர்களாகிய நாம் தேகத்தை நோயிற்கு இடமாக்காமல் பாதுகாத்துக் கொள்வதுடன், கெட்ட விஷயங்களில் பிரவேசிக்காமலும், புகை குடிக்கப் பழகாமலும் பணத்தைப் பாதுகாப்பது போல் நமது சரீரத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அப்படியின்றி இம்மாதிரியான வாடிக்கைகள் ஏற்படுமானால் அவைகளினின்று விலகுவது அஸாத்தியமாகும். ஆதலால், நாம் எப்பொழுதும் பலமும் சவுக்கியமும் குறையாமலிருக்கும்படி சரீரத்தைக் காத்துக்கொள்ள வேண்டுவது அவசியம் என்று தெரிகின்றதல்லவா? சுபம்! சுபம் !!

---


## வியாசப் போட்டி

நம் குலத்தவரிடையுள்ள கக்ஷிப்பேதங்களும் அவற்றை யொழிக்கும் விதங்களும் என்பதுபற்றி ஏற்படுத்தப்பட்ட வியாசப் போட்டிக்கு வேண்டிய அளவு வியாஸங்கள் இன்னும் வாராததால் பரிசு அளிக்கும் தேதி 1—9—31 - க்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. வியாசமனுப்புவோர் அதற்கு முன்பே எம்மிடம் சேருமாறு அனுப்பவேண்டும். [ப - ர்.]

---

## திருவல்லிக் கேணி உற்சவம்

சென்னை திருவல்லிக்கேணி தேவராய முதலி தெருவில் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிராநின்ற ஸ்ரீ ரேணுகாபரமேஸ்வரி யம்மனுக்கு 17—7—31 முதல் 29—7—31 வரை பிரமோற்சவம் மிக்க சிறப்பாக நடைபெற்றது.




## ¾ பிரமன்

தென்னாற்காடு ஜில்லா, செஞ்சி தாலுக்காவில், மேழ்ச்சாத்தாம்பாடி என்னுங் கிராமத்தில் வேதாம்பாள் என்னும் உடையார் குலப் பெண் வரிசையாக மூன்று தலைகளையுடைய ஒரு குழந்தையைப் பெற்றாளாம். ஆறு கண்களும், மூன்று மூக்குகளும், மூன்று வாய்களுமுடைய அக்குழந்தைக்கு இரண்டு காதுகளும் ஒரு உடலும் இருந்தனவாம். குழந்தை அழும்பொழுது மூன்று வாய்களும் திறந்தனவாயினும் குரல் மட்டும் ஒன்றா யிருந்ததாம். பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரையில்தான் அது உயிரோ டிருந்ததாம். இக்குழந்தை நான்முகனோடு போட்டி போட வந்தது போலும்.

## தாவர இயற்கையை மாற்றும் பெரியார்

ஜான் இன்னஸ் என்பவர் விம்பில்டன் என்னுமிடத்தில் ஒரு பெரிய தோட்ட மேற்படுத்தி அதில் பல தாவர வர்க்கங்களை வளர்த்து வருகிறார். ஜனங்கள் அத் தோட்டத்தை "ஹார்ட்டி கல்சரல் நிலையம்" எனக் கூறுகிறார்கள். அதில் தலைமைப் பரிசோதகரா யிருந்துவரும் திரு. ஜே. பி. எஸ். ஹால்டேன் என்னும் தாவர சாத்திர விற்பனர் தமது ஆராய்ச்சியின் பயனாக செய்துவரும் அதிசயங்கள் பல மக்களை மிகவும் ஆச்சரியப்படச் செய்கின்றன. அவர் ருசியற்ற பழங்களை ருசி மிகுந்தவை யாக்குகிறார்; காயைப் பழமாக்குகிறார்; சிறிய பழங்களைப் பெரியவை யாக்குகிறார்; உருண்டையானவற்றை நீண்டவை யாக்குகிறார். இன்னும், முள் நிறைந்த மரங்களையும் அழித்து முள்ளில்லாமல் வளரச் செய்கின்றார். இயற்கையின் இரகசியங்களை நன்குணர்ந்தால் தாவரம் முதலியவற்றின் இயற்கைத் தோற்றங்களையும் விதிகளையும் மாற்றுவது சுலபமே யென்பதை இவர் தமது செயல்களால் நிலைநாட்டுகிறார்.

## அறுபது வயதுடைய இளங் குமரி

உலகத்திலே செல்வத்திலும் நாகரிகத்திலும் முதன்மை பெற்று விளங்கும் புது உலகமாகிய அமெரிக்காவில் மிஸ் எட்னாவாலேஸ் ஹாப்பர் என்னும் மாது ஒருத்தி இருக்கிறாள். அவளுக்கு வயது 60. ஆனால் அவள் கட்டழகிலும் மிடுக்கிலும் 16 வயது குமரிகளையும் தோற்கடிப்பவள்போ லுள்ளாளாம். அவள் உடம்பில் தோலானது சிறிது சுருக்கமு மின்றி வாலிபரது தோல்போல் வழவழப்பாயுள்ளதாம். பார்வைக்கு 16 வயதுடையவள்போல் காண்கிறாளாம். 20 வயது மாதர்களால் செய்ய வியலாத திறமையான ஆட்டங்களை யெல்லாம் அவள் சுலபமாகச் செய்கிறாளாம். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் அவளை வீதியிற் கண்டால் அவளோடு சல்லாபமாகப் பேசுவார்களாம். அமெரிக்கரெல்லாம் அவளது இளமையைக் கண்டு அதிசயமுறுவதுடன் சாஸ்திர வரிஞர்கள் பலர் அதன் காரணத்தை யறிய ஆராய்ச்சி செய்கின்றார்களாம். நரை, திரை, மூப்பு என்னும் இளமையின் விரோதிகளை வென்ற இம் மங்கை உடலைமட்டு மன்றி உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருந்து நல்வழியிற் பழகுவதே "சந்ததமு மிளமையொ" டிருத்தற்கேற்ற மார்க்கமெனக் கூறுகிறாளாம்.

## கலியுக அகஸ்தியர்

சில நாட்களுக்குமுன் இரங்கூன் வந்து சேர்ந்த ஒரு இந்தியர் 40 அங்குல உயரமே இருக்கிறாராம். அவருடைய வயதோ நாற்பதாம். எடையோ, 50-ராத்தலாம். அவரது வலிமை வியக்கத்தக்கதாயுள்ளது. 8 மனிதர்க்கும் மேலான கனத்தையும் மார்பில் தாங்குவாராம். அவர் உலகத்திலுள்ள முக்கியமான பட்டணங்களுக்கெல்லாம் சென்றிருப்பதுடன் ஐரோப்பா முதலிய மேல்நாடுகளிலும் ராஜகுடும்பத்தினர் முன்னிலையிலும் தமது சாமர்த்தியச் செயல்களைக் காண்பித்துப் புகழ்பெற் றுள்ளாராம். இத்தகைய பெரியார் உருவத்தில் மட்டுமன்றித் திறமையிலும் அகத்திய முனிவரது அவதாரமாக இருக்கிறார் என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

## உலகத்திலேயே பெரிய நடனசாலை

வில்ஷயர் பீயிலிவாட்டி லுள்ள "எர்னஸ்ட் பெல் சார் ஸ்டியோ" என்னும் புதிய நடனசாலை உலகத்திலேயே மிகப் பெரியதாம். இது 300,000 டாலர் செலவில் கட்டப்பட்டது. இது நியூயார்க் நகருக்கு அருகில் உள்ளது. இதில் நடனமாடுவதற்கென மிக விஸ்தாரமான அறை ஒன்றும், கண்ணாடியாற் கட்டப்பட்ட அறைகள் ஐந்தும் உள்ளனவாம். பேசும் படக்காட்சி தயாரிக்க இதில் மூந்நூறு நடிகர்கள் பழகுகிறார்களாம். அமெரிக்காவில் நடக்கும் சங்கீதம், நடனம் முதலிய கலைப் பயிற்சிகட்கெல்லாம் இதுவே தலைமை ஸ்தானமாய் விளங்கும்.



# செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டு வரவேற்புக் கழக உபதலைவர் திருவாளர் குரு. க. குழந்தைவேல் முதலியார் அவர்கள் சரித்திரம்.

இவர் காஞ்சிமா நகருக் கடுத்த ஐயன்பேட்டையில் அநேக வருஷங்களாக நீடித்துள்ளதும் பிரசித்தி பெற்றதுமான ஒரு பிரபல செங்குந்த குடும்பத்தில் 1897-ம் வருஷத்தில் தோன்றியவர்.

இவரது தந்தை குரு. கு. கந்தசாமி முதலியார் இவ்வூரிலும் இவ்வூரை அடுத்துள்ள பேட்டைகளிலும் பெருந்தொகையினராக வசிக்கும் நம்மவரிடையே ஏற்பட்ட கக்ஷி வித்தியாசங்களை அவ்வப்போது தீர்த்து அவர்கள் அனைவரையும் திறமையுடன் கட்டியாண்டதுடன் விரிஞ்சிபுரம், குடியேற்றம், ஆண்டி மடம், சின்ன சேலம், ஊத்துக்குழி, காங்கய நல்லூர், பூந்துறை நாடு, நாமக்கல் நாடு, ஜம்பை நாடு, பனைப்பாக்கம் முதலிய அநேக இடங்கட்குச் சென்று தம்முடைய சொந்த வேலைகளையும் விட்டு உடல் நலம் ஓராது ஒவ்வொரு ஊரிலும் பல நாட்கள் தங்கி ஆங்காங்கே நம்மவரிடையே இருந்த கக்ஷி வித்தியாசங்களை நடுநிலைமையுடன் விசாரித்து ஒழித்து ஒற்றுமை யுண்டாக்கியும், வீணே கோர்ட்டுகளுக்குப் பணம் செலவு செய்யாமல் தடுத்தும், நம் சமூகக் கட்டுப்பாடுகள் மூலமாய்ப் பல சீர்திருத்தங்கள்செய்து தமது ஆயுள் முழுமையும் சமூக சேவைக்கே தியாகம் செய்த பெரியாராவர். இவர் ஆங்காங்கு நம்மவருக்குள் ஏற்பட்ட வியாச்சியங்களைத் தீரவிசாரித்து நீதி வழுவாமல் நிறைவேற்றிய தீர்மானங்களைக் கண்டு சில ராஜாக்களும் இவரை நன்கு மதித்திருக்கின்றனர். இவர் சென்ற ஊர்களெல்லாவற்றிலும் இவரைச் சிவிகையிலேற்றி மிக ஆடம்பரமாக வரவேற்றதே இவரிடம் நம்மவருக்குள்ள மனப்பான்மையை நன்கு விளக்கும். கொங்கு எழுபத்திரண்டென்றுரைக்கும் நாடுகளனைத்தும் இவரை நன்கு அறியும். ஐயன்பேட்டைக்கு அருகிலுள்ள ஏரிவாய் கிராமத்தின் கிராம முனிசீப் வேலையை இவர் தம் ஆயுள்வரையில் கௌரவத்திற்காகவே பார்த்து வந்தவர். இவர் 1914-ம் வருஷம் திடீரெனத் தமது 52-வது வயதில் மரணமுற்றார். இவர் குடும்பத்தார் பரம்பரையாக ஷை கிராம முனிசீப் வேலை பார்த்து வருவதால் இவர் குடும்பத்திற்கு முனிசீப் வீடென்றும் பெயர் வழங்குகிறது. அப்பெரியார் தம் உயர் தவத்தால் பெற்ற ஒப்பற்ற குமாரரான திரு. குரு. க. குழந்தைவேல் முதலியார் அவர்கள் மேற்படி கிராம முனிசீப் வேலையைப் பார்த்து வருவதுடன் 21-வயதிலிருந்தே தம் பிதாவைப் போலவே நம்மவர் வதியும் சில இடங்கட்கு இவ்வூரிலுள்ள மற்றும் சில பெரியார்களுடன் சென்று ஆங்காங்கு நம்மவரிடை யேற்படும் விகற்பங்களைத் தீர்த்துச் சமூகத் தொண்டாற்றி வருகையில் சிற்சில இடங்களில் அரசாங்கத்தாராலும் நன்கு மதிக்கப்பெற்றவர். இவர் நம்மவருக்கு வேண்டிய ஒத்தாசை புரியும் பரோபகார சிந்தையும், பொது நல நோக்கமும், ஆடம்பரமற்ற தன்மையும், பொது ஜனங்களிடையே மிகுந்த செல்வாக்குமுள்ள வீர இளைஞராவர். நம்மினத்துப் பிள்ளைகள் அனைவரும் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கவேண்டு மென்பதே இவரது பேரவா. இவர் தற்பொழுது செய்துவரும் கைலி வியாபாரத்தில் சேரும் மகமைப் பணத்தை நங்குலக் கல்வி நிதிக்கே அளிப்பதாகவும் வாக்களித்துள்ளார்.

ஐயன்பேட்டையைப் பற்றி நமது மித்திரனில் தனியே ஒரு வியாசம் வெளியாகுமாகையால் அவ்வூரைப்பற்றிக் கூறாது விடுக்கின்றேன்.

---

[188 - வது பக்கத் தொடர்ச்சி]

## குழந்தைகட்கு நாடகசாலை

அமெரிக்காவின் பிரதான பட்டணமாகிய நியூயார்க் நகரில் சிறுவர்கட்கெனப் பிரத்தியேகமான நாடகசாலை யொன்று அமைக்கப்பட் டுள்ளது. அதில் 10 முதல் 17 வயது வரையுள்ள சிறுவர் பலர் சேர்ந்துள்ளனர். அவர்களுள் பலர் நியூயார்க்கிலுள்ள கியாதிபெற்ற குடும்பத்தவர்கள்.

## பேசும் கடிகையாரம்

புது நாகரிகத்தின் பிறப்பிடமாகிய பாரிஸ் நகரத்தில் ஒரு விசித்திரமான கடிகையாரம் அமைக்கப்போகிறார்களாம். தந்திக் கம்பிகள் மூலமாய் வீடுகட்கும் அதற்கும் சம்பந்தம் ஏற்படுத்தப்படுமாம். அது ஒவ்வொரு நிமிஷமும் சரியான மணியைச் சொல்லும். வேண்டியோர் கடிகையாரத்தை உபயோகித்தால் அது "இப்பொழுது மணி 8-30", "இப்பொழுது மணி 15-45" எனச் சமயத்திற்கேற்பப் பதிலளிக்குமாம்.

---

## தலைச்சங்கப் பிரசாரகர்களது சுற்றுப் பிரயாணம்

**மண்டல மாணிக்கம்**

தலைச்சங்கப் பிரசாரகராகிய திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் 15-6-31-ல் சென்னையினின்றும் புறப்பட்டு 16-6-31-ல் மதுரையையடைந்து மதுரைச் செங்குந்த இளைஞர் சங்கக் காரியதரிசி திரு. S. மாணிக்க முதலியார் அவர்களால் உபசரிக்கப் பெற்று, திருவாப்புடையார் கோயில், தல்லாக் குளம், கோரிப் பாளையம், மதிச்சியம், மதுரை, திருப்பரங்குன்றம் முதலிய இடங்

களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு 19-6-31-ல் திருபுவனம், திருச்சுழி முதலிய இடங்களையும் பார்த்துக்கொண்டு அபிராமத்தை யடைந்து அவ்விடத்தில் உள்ள சில செங்குந்த பிரமுகர்களைக் கண்டு நமது மித்திரன் சந்தா பாக்கிகளை வசூலித்துக்கொண்டு 21-6-31-ல் மண்டல மாணிக்கத்தைச் சேர்ந்து 22-6-31 இரவு 9-மணிக்குத் திரு. ஆ. மு. பாதமபிரியா முதலியார் அவர்கள் தலைமையில் செங்குந்தர் பொதுக் கூட்டம் ஒன்று கூட்டினார்கள். அவ்வமயம் அவர் "செங்குந்தர் இனிச் செய்யும் வேலை என்ன?" என்பதைப்பற்றி ஒரு நீண்ட உபந்யாசம் செய்தார். திரு. இ. முனியப்ப முதலியார் அவர்களது வந்தன உபசாரத்துடன் 1-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

## மெய்யம் புளி

28-6-31-ல் திரு. தி. அ. சண்முக முதலியாரும் மண்டலமாணக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்க காரியதரிசி திரு. இ. முனியப்ப முதலியாரும் இராமேச்சுரத்தை யடைந்து திரு. சி. மு. மருதவீரபாண்டிய முதலியாருடன் மெய்யம் புளியைச் சேர இரவு 9-மணிக்குச் செங்குந்தர்களனைவரும் ஒருங்கே கூடினார்கள் அவ்விடம் திரு. தி. அ. சண்முக முதலியார் செங்குந்த சிலர் என்னும் பொருள்பற்றி அரிய விஷயத்தைத் தெளிவாக உபந்யசித்து அவ்விடம் உள்ள சந்தா பாக்கிகளை வசூலித்துக்கொண்டும் சிலரை மித்திரனுக்குப் புதிய சந்தாதாரராகச் சேர்த்துக்கொண்டும் 25-6-31-ல் தனுஷ்கோடி முதலிய இடங்களிலும் புதிய சந்தாதாரரைச் சேர்த்துக்கொண்டு ராமேச்சுரம் வந்து சேர்ந்தார்கள்.

## அழகன்குளம்

26-6-31 காலை திரு. தி. அ. சண்முக முதலியாரும், திரு. இ. முனியப்ப முதலியாரும், திரு. ச. மு. மருதவீரபாண்டிய முதலியாரும் அழகன்குளத்தை யடைய மாலை 4-மணிக்குத் திரு. வே. ஆ. ஐயாவு முதலியார் அவர்கள் தலைமையில் செங்குந்தர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வூர்ச் செங்குந்தரும் மற்றைய ஜாதியாரும் சேர்ந்து திரளான ஜனங்கள் கூடியிருந்தார்கள். அவ்வமயம் திரு. தி. அ. சண்முக முதலியார் செங்குந்த சமூக சீர்திருத்தமென்பதைப்பற்றி விரிவான உபந்யாசம் செய்தார். அவ்வூரில் கிளைச் சங்க ஸ்தாபனம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திப் பேசினார். அதன் சார்பாக திரு. இ. முனியப்ப முதலியாரும், திரு. ச. மு. மருதவீரபாண்டிய முதலியாரும் முறையே, "ஒழுக்கம், கள்ளுண்ணாமை" என்னும் விஷயங்களைப்பற்றி உபந்யசித்ததின் பயனாய்க் கிளைச்சங்க ஸ்தாபனமும் உத்தியோகஸ்தர் தேருதலும் நடைபெற்றன.

அழகன்குளம் செங்குந்த சீர்திருத்தசங்கம்

தலைவர்: திரு. தா. மு. குப்புசாமி முதலியார்,

உபதலைவர்: திரு. அம்பலம் ராமு முதலியார், திரு. சி. வ. வீரபத்திர முதலியார்,

காரியதரிசிகள்: திரு. க. மு. சுப்பிரமணிய முதலியார், திரு. நா. மு. பொ. முத்துநாகலிங்க முதலியார்.

பொக்கிஷதார்: திரு. வே. ஆ. ஐயாவு முதலியார்,

கணித பரிசோதகர்: திரு. சி. கணபதி முதலியார்.

"இச்சங்கமானது நமது சமூகத்திற்கு ஆக வேண்டிய சீர்திருத்தங்களை அடிக்கடி பரப்ப வேண்டு"மென்றும், "இச்சங்கம் சென்னையில் உள்ள நமது தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு வருடப் பிரதி வருடம் கட்டணமாக ரூபா 5-0-0 கட்டவேண்டு" மென்றும் தீர்மானிக்கப்பட்டது. 1931-ம் வருடக் கட்டணம் தலைச் சங்கப் பிரசாரகரிடம் கொடுத்து விடப்பட்டது. வந்தன உபசாரத்துடன் இரவு 10-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

## ரகுநாதபுரம்

27-6-31-ல் பிரசாரகர்கள் இரவு 9-மணிக்கு ரகுநாதபுரஞ் சேர்ந்து அவ்வமயமே ஓர் செங்குந்தர் பொதுக் கூட்டம் கூட்டித் திரு. அம்பலம் பூ. முனியப்ப முதலியார் தலைமையில் திருவாளர்கள் தி. அ. சண்முக முதலியாரும், இ. முனியப்ப முதலியாரும், ச. மு. மருதவீரபாண்டிய முதலியாரும் கல்வி, ஒழுக்கம், பத்திரிகை என்னும் விஷயங்களைப்பற்றி உபந்யசித்தார்கள். 12-மணிக்கு வந்தன வாழ்த்துடன் கூட்டம் நிறைவெய்தியது.

## தேவக்கோட்டை

29-6-31 காலையில் திரு. ச. மு. மருதவீர பாண்டிய முதலியார் தமது வியாபார ஜோலியாக ராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தார். திருவாளர்கள் தி. அ. சண்முக முதலியாரும், இ. முனியப்ப முதலியாரும் ராமநாதபுரம் பார்த்துக் கொண்டு 1-7-31-ல் பரமக்குடியை யடைந்து, திரு. நாகமுத்து ராமலிங்க முதலியாரால் உபசரிக்கப்பெற்று அவ்வூரிலுள்ள செங்குந்தப் பிரமுகர்களைக் கண்டு சந்தா பாக்கிகளை வசூலித்துக் கொண்டு அவ்வூரில் கூட்டம் கூட்ட எவ்வளவோ முயற்சித்தும் திரு. ம. ப. ரா. இருளாண்டி முதலியார் வீட்டுக் கலியாண ஜோலியால் முடியாமற் போய்விட்டது. எமனேஸ்வரம் சென்று திரு. பதினெட்டாம்படி முதலியார் அவர்களாலும் அவ்வூர்ச் செங்குந்த அம்பலக்கார் அவர்களாலும் உபசரிக்கப் பெற்று அவ்வூரில் உள்ள சந்தா பாக்கிகளை வசூலித்துக் கொண்டு 2-7-31-ல் திருவாடானை, ஆண்டி வயல், கருங்கல் வயல், ஓரமங்கலம் முதலிய இடங்களைச் சுற்றிக் கொண்டு சந்தா வசூலித்துக் கொண்டு 3-7-31-ல் தேவக்கோட்டையை யடைந்து அவ்வூரில் ஸ்ரீ முருகானந்த வயித்தியசாலை அதிபர் சித்தாமணி திரு. வாலசுப்பிரமணிய முதலியார் அவர்களாலும் ஏனைய செங்குந்த பிரமுகர்களாலும் உபசரிக்கப் பெற்றபின், 4-7-31 இரவு 9-மணிக்குச் செங்குந்தர்களுக்குச் சொந்தமான மாரியம்மன் கோயில் முன்றிலில் ஓர் செங்குந்தர் பொதுக் கூட்டம் கூட்டப் பெற்றது. அவ்வூர்ச் செங்குந்தர்களும் மற்றைய வகுப்பாரும் வந்திருந்தார்கள். அவ்வமயம் திரு. வாலசுப்பிரமணிய முதலியார் தலைமை வகிக்க திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் செங்குந்தர் கடமை என்னும் விஷயத்தைப் பற்றி உபந்யசித்தார். தலைவர் முடிபுரைக்குப் பின் வந்தனம் கூற இரவு 12-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது. தேவக் கோட்டையில் கிளைச் சங்க ஸ்தாபனத்தைப்பற்றி விரிவுரை நிகழ்த்திய பின் சங்கம் ஸ்தாபிக்கப் பெற்றது. தலைச்சங்கக் கட்டணம் வருடப் பிரதி வருடம் ரூபா 5-0-0 கொடுக்கும்படி தீர்மானிக்கப் பெற்று 1931-ம௵ கட்டணம் நமது பிரசாரகரிடம் கொடுக்கப்பெற்றது. உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்ததைப் பற்றி அடுத்த மித்திரனில் வெளியிட விரும்புகிறோம்.



## பொம்மையாபுரம்

5-7-31 பகல் புறப்பட்டு காரைக்குடி, மதுரை, அருப்புக்கோட்டை, விருதுநகர், எட்டியாபுரம், விளாத்தி குளம், நாகலாபுரம் முதலிய இடங்களைச் சுற்றிக் கொண்டு 9-7-31-ல் க. பொம்மையா புரத்தைச் சேர இரவு 8-மணிக்கு அவ்வூர்ச் செங்குந்தர் பொது மடத்தில் கூட்டம் கூட்டப்பெற்றது. அவ்வமயம் திரு. தி. அ. சண்முக முதலியார் "செங்குந்தர் முன்னேற்றம்" என்னும் விஷயத்தைப்பற்றி 2-மணி நேரம் உபந்யசித்து மறுநாள் காலை புறப்பட்டு எட்டியாபுரம் வந்து சேர்ந்தார்.

## கடலையூர்

10-7-31-ல் கடலையூரை யடைந்து திரு. ச. கு. மாடசாமி முதலியார் அவர்களால் உபசரிக்கப்பட்டு இரவு 9 மணிக்கு அவ்வூர் செங்குந்தர் பொது மடத்தில் கூட்டம் கூடினர். அவ்வமயம் திரு. அ. சு, சண்முக முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். திரு. தி. அ. சண்முக முதலியார் செங்குந்தரும் கல்வியும் என்னும் விஷயத்தைப் பற்றி உபந்யசித்தார்கள். இரவு 11 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

## ஸ்ரீ வில்லிபுத்தூர் ராமகிருஷ்ணபுரம்

12-7-31-ல் ஸ்ரீ வில்லிபுத்தூரை யடைந்து அவ்வூர்ச்செங்குந்த பிரமுகர்களாலும் திரு. கி. கு. சுப்ரமண்ய முதலியார் அவர்களாலும் திரு. ச. சோமசுந்தர முதலியார் அவர்களாலும் உபசரிக்கப் பெற்றபின், இரவு 8 மணிக்குச் செங்குந்த விநாயகர் ஆலயத்தில் திரு. சு. மாயாண்டிமுதலியார் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அவ்வமயம் தி. அ. சண்முக முதலியார் செங்குந்தர் கடமை என்பதைப்பற்றி உபந்யசித்தார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் அவ்வூர்ச் சங்கக் காரியதரிசி திரு. ச. சோமசுந்தர முதலியார் அவர்களால் வந்தனம் கூறப்பெற்று இரவு 11 மணிக்குக் கூட்டம் நிறைவேறியது.

14-7-31-ல் விருதுநகர், மதுரை, சோழவந்தான் தென்கரை, முள்ளிப்பள்ளம், திருவேடகம் முதலிய இடங்களைச் சுற்றிக்கொண்டு மதுரை வந்து 18-7-31 பகல் 12-30 மணிக்குச் சென்னை வந்து சேர்ந்தார். நமது தலைச்சங்கப் பிரதிநிதிகளை அவ்வவ்விடங்களில் வரவேற்று உபசரித்து உதவிய செங்குந்த கனவான்களுக்கு தலைச் சங்கம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

---

## நன்கொடைகள்

31-7-31-ல் புதுவையைச் சார்ந்த, கதிர்காமம், வடவண்டை வீதி, சைலாஸ் வியாபாரம் மு-அ-க. அருணாசல மூப்பனார் அவர்கள், அவ்வூர் கலியாணம், சீமந்தம், கர்ணவேதனம் முதலிய சுப சடங்குகளில் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடையாக மனமுவந்து வசூல் செய்து கொடுத்தது ரூ. 3—8—0

பிரஜோற்பத்தி௵ ஆடிமீ 16௳ புதுவையைச் சார்ந்த செல்வபெருமான் பேட்டையில், திருக்கோயில் கொண்டு விளங்கும் ஊத்துக்காட்டு மாரியம்மன் இரதோற்சவத் திருவிழாக்காலத்து தலைச் சங்கத்திற்கு ஷை கோயில் தர்மகர்த்தர்கள் மனமுவந் தளித்த நன்கொடை ரூ. 0—8—0

2-8-31-ல் புதுவையைச் சார்ந்த பெத்துசெட்டிப் பேட்டை செங்குந்த கனவான்கள் நமது சங்கப்பிரசாரகர் தமிழ்ப்புலவர், குமாரகுரு முதலியார் அவ்வூர்க்கு விஜயம் செய்தபோது வரவேற்பு நன்கொடையாகத் தலைச்சங்கத்திற்கு மனப்பூர்வமாய்க் கொடுத்தது ரூ. 0—8—0

புதுவையைச் சார்ந்த பெத்துசெட்டிப் பேட்டை அ. வெங்கடாஜல முதலியார் தமது புதல்வி திருவளர் செல்வி சுந்தரம் அம்மையை ஷை மீனுக்ஷிப்பேட்டை நடேச முதலியாருக்குப் பாணிக்கிரகண முகூர்த்தஞ் செய்வித்தபோது, நன்கொடையாகத் "தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க"த்திற்கு வந்தனத்துடன் அளித்தது ரூ. 0—8—0

நாகபட்டணம் திரு. நா. பொ. முத்தையா முதலியார் அவர்கள் புத்திரர் திரு. சதாசிவ முதலியாருக்கும், தேவகோட்டை திரு. பி. சி. த. ந. வீரபுத்திர முதலியார் அவர்கள் புத்திரி திருவளர் செல்வி தமயந்தி அம்மாளுக்கும் 3-6-31 வைகாசித்திங்கள் 21-ம் நாள் புதன் வாரத்தன்று நடந்தேறிய திருமணத்தில் பெரியோர்கள் ஆசிகூற வழங்கப்பட்டு டாக்டர் S. P. V. P. பாலசுப்பரமணிய முதலியாரவர்களால் வசூலித்தனுப்பப்பட்ட நன்கொடை ரூ. 2—0—0

கொரணூடு சின்ன இரகலி தெரு திரு. ஆ. சொ. ஆ. அப்புலிங்க முதலியார் தமது திருமகன் திருமணத்தின் போது உவந்தளித்த நன்கொடை ரூ. 1—0—0

# கிளர்ச்சி

## கிளைச்சங்கக் காரியதரிசிகளுக் கோர் அறிவிப்பு

நமது மித்திரனில் வெளிவரும் விஷயங்களில் நம்மவரிடை புண்டாகும் கிளர்ச்சியைப் பற்றிய விவரங்கள் ஒரு முக்கிய அம்சமாக அமையுமாயினும், அது நம்மவர் ஊக்கத்திற்கொரு தூண்டுதலாக இருக்குமாயினும், அதுவே மித்திரனது பக்கங்களிற் பெரும் பகுதியை அடைத்துக் கொள்கிறதென வாசகர்கள் முறையிடுவதாலும், மித்திரனும் ஒரே விதமான போஜனத்தையே அதிகமாக விரும்பாமையாலும் அவ்விஷயங்களைச் சுருக்கி வெளியிட முயன்றுள்ளோம். கிளர்ச்சியைக் குறித்து அனுப்புவோர், சங்கத்தின் பெயர், கூட்டம் நடந்த தேதி, பேசப்பட்ட விஷயங்கள் ஆகிய அத்தியாவசியமான விபரங்களையும் தலைவர், உபந்நியாசகர் ஆகிய முக்கியமானவர்களது பெயர்களையும், தீர்மானங்களுண்டாயின் அவற்றின் முக்கிய அம்சங்களையும் மட்டும் குறித்தனுப்புவராயின் எமது சிரமம் குறையும். இதுபற்றி நாம் பல முறை எழுதிய பல குறிப்புக்கள் வாசகர்களால் கவனிக்காது விடப்பட்டன. இனியாயினும் இதைக் கவனித்து விபரங்களைச் சுருக்கமாக குறித்தனுப்புமாறு கிளைச் சங்கக் காரியதரிசிகளை வேண்டுகிறோம். பலரது பெயர்களையும் விரிவான விபரங்களையும் பிரசுரிக்க மித்திரன் இடந்தராததுபற்றி வருந்துகிறோம். இக் குறிப்பை அசட்டைசெய்து மிக விரிவாக எழுதியனுப்பும் விபரங்களையும் இனி மேற்கண்டபடி மிகவும் சுருக்கியே வெளியிடப்போகிறோம் என்பதைத் தெரிவிக்கிறோம். (ப-ர்.)

---

### செங்கற்பட்டு ஜில்லா

#### காஞ்சிச் செங்குந்த மாணவர் கழகம்

#### முதலாண்டு விழா

இக்கழகத்தின் முதலாண்டு விழா பிள்ளையார் பாளையம் முனிசிபல் ஆண் பாடசாலை நூலில் செங்கற்பட்டு தாலுக்கா ஜில்லா போர்டு அங்கத்தினர் சைவத் திருவாளர் ம. முருகேச முதலியார் அவர்கள் அவைத் தலைமையின் கீழ்க் கொண்டாடப் பெற்றது. மாணவர்களும் பல பெரியோர்களும் குழுமி இருந்தனர்.

தலைவர் தேர்தல், கடவுள் வணக்கம், தலைவர் முன்னுரை இவைகள் நிகழ்ந்த பின்னர் குடியாத்தம் முனிசிபல் ஹைஸ்கூல் தமிழாசிரியர் சைவத் திருவாளர் செங்கல்வராய முதலியார் அவர்கள் "மாணவர் கடமை" என்பது பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

பிறகு கல்லூரி மாணவர்களால் இரும்புச் சங்கலி அறுத்தல் முதலிய தேகப் பயிற்சி விளையாட்டுகள் காண்பிக்கப்பட்டன.

மேற்படி கழகத்தின் ஆதரவில் நடந்த சங்கீதப் போட்டிப் பரீக்ஷையில் முதன்மைபெற்ற R. S. பிரகாசம் என்னும் மாணவருக்குப் பரிசு அளிக்கப் பெற்ற பின் தலைவர் தம்முடைய முடிவுரையில் மாணவர் முன்னேறுவதற்கு ஏதுவான அனேக புத்திமதிகளைச் சொல்லித் தன்னுடைய முடிவுரையை முடித்தார்.

கடைசியில் கழகத் தலைவர் திருவாளர் C. நடராஜன் B. A., அவர்களால் தலைவர், உபந்நியாசகர் அவர்களுக்கும் மற்றுமுள்ள பெரியார்களுக்கும் வந்தனோபசாரம் கூறப் பெற்று ஆண்டு விழா இனிது நிறைவேறியது.

#### தேநீர் விருந்து

மாணவர் கழகத்தினின்று தொண்டர் படைத் தலைவராகவும், உப தலைவராகவும் சென்று மகாநாட்டில் பணியாற்றிய திருவாளர்கள் K. வஜ்ஜிரவேலு அவர்களுக்கும் P. சுப்பிரமணியன் அவர்களுக்கும் மற்றும் இக் கழகத்தின் அங்கத்தினர்களாகிய 35 தொண்டர்களுக்கும் செங்குந்தர் இரவு பாடசாலையில் இக் கழகத்தின் போஷகர்களான திருவாளர்கள் V. திருஞானசம்பந்த முதலியார், C. அருணாசல முதலியார் அவர்களாலும் கழகத்தின் தலைவரான திருவாளர் C. நடராஜன் B. A., அவர்களாலும் 31—6—31 மாலை 5 மணிக்கு ஒரு தேநீர் விருந்து அளிக்கப்பெற்றது.

சிற்றுண்டி அருந்திய பின் மாணவர்களால் சங்கீதமும், விகடமும் நடைபெற்றபின் தலைவருக்கும், போஷகர்களுக்கும் ஜே! என்ற கரகோஷத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

N. P. தணிகைராயன்,
M. M. சரவணன்.

#### சைதாப்பேட்டை செங்குந்த வாலிபர் சங்கம்

2-8-31 அன்று மாலை செங்குந்த திலகரும் மிகவல்ல வியாபாரியுமான திரு. S. சடையப்ப முதலியார் குமாரர் S. நடராஜ முதலியார் தலைமையிற் கூடிய பொதுக் கூட்டம் ஒன்றில், திரு. க. வஜ்ஜிரவேல் முதலியார் அவர்கள் பி. ஏ., 'வாலிபர் கடமை' என்பது பற்றிய அரிய உபந்நியாசம் நிகழ்த்தியபிறகு, செங்குந்த மகாஜனங்களது விருப்பத்திற்கிணங்க ஷை வாலிபர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு உத்தியோகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். இச்சங்கம் சைதாப்பேட்டை செங்குந்தரது நிலையை எல்லா விதங்களிலும் உயர்த்துதற்கான வழிகளிற் பெரிதும் பாடுபடுமென நம்பப்படுகிறது.

---

மற்ற சங்கங்களின் கிளர்ச்சிகள் அடுத்த சஞ்சிகையில் வெளிவரும்.




ஐயா,
மின்சார ரசம் வாங்கி 4½-வருஷமாக இருந்த விப்புருதி 10-நாட்களுக்குள் புண் ஆறிப் போனபடியால் தயவு செய்து இன்னும் ஒரு புட்டி அனுப்புங்கள்.
ராஜிப்பாளையம் கிராமம்
க. அ. அங்கப்ப தேவர், ... போஸ்டு.

12-9-29 செம்மனுப்பட்டி,
ஐயா, ௸ மின்சார ரசத்தை எருமை வெண்ணெயில் கலந்து சாப்பிட்டதில் வெள்ளை, வெட்டை சவுக்கியமாய் விட்டது. தயவு செய்து 3-புட்டி அனுப்புங்கள்.
தொந்தி கெட்டியார், வாடிபட்டி போஸ்டு.

# மின்சார ரசம்

சகல ரோகங்களுக்கும் தேவாமிர்தம் போன்றதென ஜகப்பிரசித்திப் பெற்றது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம்.

புட்டி 1-க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு

விலாசம்:— கேட்லாக் இனும்.

மின்சார ரசம் கம்பெனி (லிட்) சேலம்

ஐயா, ஆரணி 21-5-29
௸ 6-வேளை மின்சார ரசம் மருந்தில் கால் வீழ்ந்து கிடந்த நோய் தீர்ந்தது இன்னும் 2-பாட்டல் அனுப்புங்கள்
M. A. ஆளவந்தார் பாகவதர், பிஞ்சல் தெரு.

Champion Reefs. 27-1-30
ஐயா
என் மனைவிக்கு 7 வருஷ காலமாக வயிற்றில் இருந்த வலை ... மின்சார ரசத்தினால் சௌக்கியமாய் விட்டது இன்னும் ஒரு பாட்டல் அனுப்புங்கள்.
R. V. Kattaari G. Block, 53rd Line

## நமது தலைவர்களது அழகிய போட்டோ படங்கள்

| தபாற் செலவு உள்பட விலை | | ரூ. | அ. |
|---|---|---|---|
| ஓட்டக்கூத்தர் | ... | 1 | 4 |
| தலைச்சங்க நிர்வாக சபை அங்கத்தினர் (22 பேர் கொண்ட படம்) | ... | 2 | 8 |
| ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., (செங்குந்த மித்திரன் ஆசிரியர்) | ... | 1 | 8 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் | ... | 1 | 8 |

மானேஜர்,
செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெருவு, சென்னை.

Registered No. M. 1514

# உங்கள் வியாபாரம் விருத்தியாக வேண்டுமா?

## நீங்கள் வியாபாரத்தில் பெருவாரியான லாப மடைய வேண்டுமா?

அப்படியாயின்

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும், இந்தியா முழுவதும் மட்டுமன்றி இலங்கை, இரங்கூன், பினங்கு, தென் னாபிரிகா முதலிய வெளி நாடுகளிலும் சென்றுலவுவதுமாகிய

உயர்ந்த தமிழ் மாதப் பத்திரிகை

# 'செங்குந்த மித்திர'னில்

## உடனே உங்கள் வியாபாரத்தைப் பற்றி விளம்பரஞ் செய்யுங்கள்

விளம்பர விகிதம்

| | | ஒரு வருஷம் | ஆறு மாதம் | மூன்று மாதம் | ஒரு மாதம் |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரு. | 150 | 75 | 40 | 15 |
| 1/2 " | " | 90 | 45 | 25 | 10 |
| 1/4 " | " | 60 | 30 | 16 | 6 |

ஆர்டருடன் பாதி பணம் அட்வான்ஸ் அனுப்ப வேண்டும்.

மானேஜர்,

"செங்குந்த மித்திரன்" ஆபீஸ்,

பவழக்காரத் தெரு, சென்னை.

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Sengunthа Mahajana Sangam, Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswamy, at The Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras.